Registered as a news paper in Ceylon

பிரதி சதம் 10

# ஈழநாடு

EELA NADU

National Tamil Daily தேசிய தினசரி

தபாற் பெட்டி எண் 49

ஈழநாடு
சந்தா விபரம்
வாரப்பதிப்பு உட்பட
ஒரு வருடத்துக்கு ரூபா 40-00
6 மாதத்துக்கு ரூபா 21-00
3 மாதத்துக்கு ரூபா 11-00

ஏர் ௦ யாழ்ப்பாணம் சுபகிருது பங்குனி 22 ஆம் நாள் துல்கஃதா 9 (4-4-63) வியாழக்கிழமை இதழ் 55

வட்டமேசை

# 'மகாநாடு பயன்தராது'

## நடைபெற்றாலும் பிரயோசன மில்லை

## எஸ். ஜே. வி. அபிப்பிராயம்

யாழ்ப்பாணம், வியாழன்

"வட்டமேசை மகாநாட்டினால் பயன் எதுவும் ஏற்படப் போவதில்லை" என்று தமிழரசுக்கட்சியின் தலைவர் திரு. எஸ. ஜே. வி. செல்வநாயகம் நேற்று இங்கு தெரிவித்தார். திரு. செல்வநாயகத்தைச் சந்தித்த நமது நிருபர் மூன்று கேள்விகள் கேட்டார். அந்தக் கேள்விகளையும் அதற்கு அவர் அளித்த பதில்களையும் இங்கு காணலாம்.



**கேள்வி:** தமிழர்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு ஒரு வட்ட மேசை மகாநாடு கூடுவது பற்றி உங்களின் அபிப பிராயம் என்ன?

**பதில்:** வட்டமேசை மகாநாடு வரப்போவதுமில்லை அதனால் ஒரு பிரயோசனமுமில்லை. தமிழ் மக்களின் பிரதிநிதிகளல்லாத வேறுசிலருடன் கூடும் மகாநாட்டினால்

(5-ம் பக்கம் பார்க்க)

## "ஆடும், சிங்கமும் சந்தித்த முடிவுதான்"

## திரு. சுந்தரலிங்கம் கருத்து

யாழ்ப்பாணம், வியாழன்

"சிங்கமும் ஆட்டுக்குட்டியும் ஓரே இடத்தில் சந்தித்து சமாதானப்பேச முற்பட்டால் அதன் முடிவு எப்படி இருக்குமோ அப்படித்தான் சிங்களத் தலைவர்களும் தமிழ்த் தலைவர்களும் கூடும வட்டமேசை மகாநாட்டின் முடிவும் இருக்கும்" என்று வவனியா முன்னாள் எம். பி. யும் ஈழத் தமிழர் ஒற்றுமை முன்னணித் தலைவருமான திரு. ஸி. சுந்தரலிங்கம் நேற்று 'ஈழநாடு' நிருபருக்கு அளித்த பேட்டியில் தெரிவித்தார்.



மொழிப் பிரச்னைக்கும் இந்திய வம்சாவழியினர்பிரச்னைக்கும் வட்டமேசை மகாநாடு கூட்டுவதன் மூலம் நல்ல தீர்வு காணமுடியுமென்று தமிழ்க்காங்கிரஸ்தலைவர் திரு. ஜீ. ஜீ. பொன்னம்பலம் தெரிவித்த யோசனை பற்றிக் கருத்துத்தெரிவிக்கையிலேயே திரு. சுந்தரலிங்கம் இவ்வாறு கூறினர்.

### முன்னரே மூவரும் மறுத்தோம்

திரு. சுந்தரலிங்கம் மேலும் தெரிவித்ததாவது:-

பாராளுமன்றத்தில் சிங்களச் சட்டம் கொண்டுவருவதற்கு மூன்று நாட்களுக்கு முன் திரு. பண்டாரநாயக்கா எனக்கும், பொன்னம்பலத்திற்கும், செலவநாயகத்திற்கும், அபிப்பிராயம் தெரிவிக்க வரும்படி அழைப்பனுப்பியிருந்தார். இந்த அழைப்பு எனக்குக்கிடைத்த நேரத்தில் பொன்னம்பலமும், செல்வநாயகமும் என்னுடனே இருந்தார்கள் நாங்கள் மூவரும் யோசித்து 'தமிழ் மொழிக்கு சம அந்தஸ்து' அளிக்க சம்மதமானால் தான் நாங்கள் வருவோம் என அறிவித்தோம் ஆனால் பண்டாரநாயக்கா அதற்கு ஒரு பதிலும் அனுப்பாமல் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றினர். இந்த நிலை ஏற்பட்ட பின்பும் வட்டமேசை மகாநாடு கூடுவதினால் யாதேனும் பயன் வருமா?

### மும் மொழிகளுக்கும் அந்தஸது

1944-ம் ஆண்டு சட்டசபையிலே ஆங்கிலமும், சிங்களமும், தமிழும் இலங்கை முழுவதும் சம அந்தஸ்தாக இருக்க வேண்டுமென்று ஒரு பிரேரணை கொண்டுவரப்பட்டது. அதன்படி 1955-ம் ஆண்டுவரை மூன்று மொழிகளும் இலங்கை முழுவதும் சம அந்தஸ்தோடு இருந்தன. 1947-ம் ஆண்டு இலங்கைக்கு சுதந்திரம் கிடைப்பது சம்பந்தமாக ஒரு பிரேரணை கொண்டுவரப்பட்டபோது ஒரு தமிழ்ப்பிரதிநிதியாவது அதற்கு எதிர்த்து வாக்களிக்கவில்லை ஏனெனில் அப்பொழுது நாடுமுழுவதும் தமிழுக்கும் அந்தஸ்து கொடுக்கப்பட்டிருந்தது.

### தமிழில் தான் தொடர்பு

1802-ம் ஆண்டு ஆங்கிலேயர் இலங்கைக்கு வந்தபின்பும்வன்னிப்பகுதியில் தமிழர்கள் ஆண்டு

(5-ம் பக்கம் பார்க்க)

கோயில் ஐயர் கொலை வழக்கு

## 'துறைமுகத்தில் என்னைப் பார்த்தீரா?'

## விதானையாரிடம் கோகிலாம்பாள் கேள்வி

சாவகச்சேரி, வியாழன்

சாவகச்சேரி மாஜிஸ்ரேட் கோர்ட்டில் நீதிபதி திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் உருத்திரபுரம் கோயில் ஐயர் கொலைவழக்கு நேற்று காலை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது நெடுந்தீவு இரண்டாம் பிரிவு விதானையார் நாகேந்திரர் கணபதிப்பிள்ளையை, 3-வது எதிரியும் காலஞ்சென்ற காசிலிங்க சர்மாவின் மனைவியாகிய கோகிலாம்பாள் குறுக்குவிசாரணை செய்தார். எதிர்பார்க்கப்படாத நிகழ்ச்சியை கேள்விப்பட்டு பலர் கோர்ட்டை நோக்கி ஓடிவந்தார்கள். ஆனால் அதற்குள் 3-வது எதிரியாகிய கோகிலம்பாள் குறுக்கு விசாரணையை சுருக்கமாக முடித்துக் கொண்டார்.

உருத்திரபுரம் பிள்ளையார் கோவில் ஐயர் காசிலிங்கசர்மாவை 1962-ம் ஆண்டு மார்கழி 13-ம் திகதி கொலைசெய்ததாக முத்தர் வேலுப்பிள்ளை ஆர். பசுபதி, கொகிலாம்பாள் ஆகியோர் மீது இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

முதலாவது எதிரிக்காக திரு. ஏ. அமிர்தலிங்கம், திரு. ஆர். டீ. சிவகுருவின் அனுசாரணையுடனும் 2-வது எதிரிக்காக திரு. டி. கணேசலிங்கம் திரு. வி. செல்லத்தம்பியின் அனு

(5-ம் பக்கம் பார்க்க)



கோகிலாம்பாள்

### இன்று

வண்ணை சிவன்கோவில் 16-ம் திருவிழாவில் மாலை 6-மணி முதல் ஸ்ரீ வி. எஸ். எஸ். மணி பாகவதர் "வங்கம் தந்த சிங்கம்" என்னும் பொருள்பற்றி கதாப்பிரசங்கம்நிகழ்த்துவார்.

## 'எல்லாம் தமிழியக்கம்' பிரசாரக் கூட்டங்கள்

## வடபகுதி தமிழரசு எம். பி.க்களின் நேற்றைய முடிவு

யாழ்ப்பாணம், வியாழன்

'எல்லாம் தமிழியக்கத்தை" விரிவுபடுத்தும் முகமாக, வடமாகாணத்தின் எல்லாப் பகுதிகளிலும் பிரசாரக் கூட்டங்களை நடத்துவதென்று தமிழரசுக் கட்சி நேற்று மாலை தீர்மானித்துள்ளது.

தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணக் கிளைக் காரியாலயத்தில் இன்று மாலை நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மேற்கண்ட முடிவு செய்யப்பட்டது. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்துக்கு வடமாகாண தமிழரசுக் கட்சி எம். பி.க்கள் எல்லோரும் சமுகமளித்திருந்தனர்.

"எல்லாம் தமிழியக்கம்", ஒவ்வொரு தொகுதியிலும் அந்தந்தத் தொகுதியின் பாராளுமன்ற அங்கத்தவர் தலைமையில் நடைபெறவேண்டுமென்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. தமிழரசுக் கட்சி எம். பிக்கள் இல்லாத பகுதிகளில் அந்தந்தப்பகுதி கட்சித் தலைவர்களின் தலைமையில் இந்த இயக்கத்தைக் கொண்டு நடத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழரசுக் கட்சியின் பிரசாரக் கூட்டங்கள் கீழ்வரும் திகதிகளில் குறிப்பிட்ட இடங்களில் நடைபெறும்.

வவனியா 7-ம் திகதி உடுப்பிட்டி 8-ம் திகதி, நல்லூர் 9-ம் திகதி, உடுவில் காங்கேசன்துறை 10-ம் திகதி, சாவகச்சேரி 11-ம் திகதி, கோப்பாய் 12-ம் திகதி, வட்டுக்கோட்டை 13-ம் திகதி, பருத்தித்துறை 15-ம் திகதி

## புதுச்சேரிக்கு புதிய வானெலி

புதுச்சேரி, ஏப்ரல்03

புதுச்சேரியில் புதிய ரேடியோ நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்படவிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## வரி விளம்பரம்

**ST. JOHN'S ACADEMY,**
**Chundikuli, Jaffna.**

Wanted from May 1963 qualified teachers for G C E, Varsity Entrance and H.S.C. Classes – Arts & Science Subjects. Day & Evening Classes. Apply to the Director before 10th April.

### விற்பனைக்கு

மொறிஸ்மைனர் EL 5000 தொடர். புதுக்கிய நிலைமை. ரூபா 6250-00, 226, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம். 846

### தொய்வு: நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம் மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50 நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50. வைத்தியர் பரிபூரணானந்தர் வைகலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

சாவகச்சேரி தபால் ஆபீஸ் றோட்டில் மகளிர் கல்லூரியிலிருந்து 200 யாருக்கு அருகாமையில் 6 பரப்புக் காணியில் சிறந்த மாமரங்கள் உள்ளதும், மின்சாரம், கராஜ் உள்ளதுமான 3 அறையுள்ள புது நாகரிகமான வீடு ஒன்று விற்பனைக்குஇருக்கிறது.

106, பழைய றோட்டு, களுத்துறை.

### காணிவிற்பனவு

சாவகச்சேரி புகையிரத ஸ்தானத்திற்கு அருகாமையில் $8\frac{1}{2}$ பரப்புக் காணியும் பயிர்வகைகளும் விற்பனைக்குண்டு. வாங்குபவர் P W. இரத்தினம், 157, வடமாகாண வன இலாகா அதிபர், பீச் றோட் விலாசத்தில் தொடர்புகொள்ளவும். போன் நம்பர் 625 849

### வீடுவாடகைக்கு

இரு இளம் தம்பதிகளுக்கு வசதியான ஆறு அறைகளை உடைய ஒரு வீடு நாவலர் வீதியில் வாடகைக்குண்டு. வாடகை ஒரு பகுதிக்கு 45 ரூபா. அரசாங்க உத்தியோகஸ்தர் அல்லது ஆசிரியர்கள் விரும்பத்தக்கது விபரங்களை மாலை 5—7 மணிக்கிடையில் ரத்தினம், தமிழ்ப் பண்ணை, 193, கே. கே. எஸ். வீதியில் வந்து அறியவும். 851

### தேவை

மட்டக்களப்பில் ஒரு ஹோட்டலுக்கு மனேஜரும் இரண்டு திறமையான சமயல்காரர்களும் தேவை. மனேஜர் சம்பளம் 125-ம் சாப்பாடும் பிணை: 2000 ரூபா.

5-ந் திகதி யாழ்ப்பாணம் நாக விகாரையில் 10 மணிக்கும் 4 மணிக்கும் இடையில் நேரில் வரவும். எஸ். ஏ. கந்தசாமி 902

### பெரியகடையில்

யாழ்ப்பாணம் பெரியகடையில், கொட்டடி றோட்டில் சத்திரத்துச் சந்தியில் இருந்து 50 யாருக்குள் இரு சிறு கிட்டங்கிகள் விற்பனைக்கு இருக்கின்றன. விபரங்களுக்கு: பிறக்டர் அம்பலவாணர், புத்தூர். 901


## கடவுளால் வந்த அதிர்ஷ்டம்

கொழும்பு, புதன்

எட்டாவது கைத்தொழில் கவிடபில் முதற்பரிசு பெற்ற கே. டி. ஞானதாசா தமக்கு இந்த அதிர்ஷ்டம் வரக்கதிர்காமக் கடவுளே காரணம் என்று கூறினர்.

# “புன் சிரிப்பும் அன்பும் 'நோயைத் தீர்க்கும்'”

## பட்டம்பெற்ற தாதிகளுக்கு டாக்டர் கருணாரத்தின யோசனை

யாழ்ப்பாணம், வியாழன்

"ஆஸ்பத்திரி நோயாளர்களின் ஒரு விடுதிச்சாலையாகவும் அவ்விடுதிச்சாலையை நடத்துபவர்களாகத் தாதிமார் தம்மைக் கணித்து புன்சிரிப்புத் தவழ்ந்த முகபாவனையுடனும் அன்புகனிந்த பேச்சுடனும் நோயாளர்களின் வசதிகளைக் கவனித்தல் மிக அவசியமானது நீங்கள் சென்ற மூன்று வருடங்களாகக் கற்றதுடன் உங்கள் கடமையைச் சுலபமாக முடித்துவிடலாம் என நீங்கள் கொள்வீர்களானுல் தவறு புரிந்தவர்களாவீர்கள்" இவ்வாறு சுகாதாரசேவை அதிபர் டாக்டர் டபிள்யு. ஏ. கருணாரத்ன நேற்று முன்தினமிரவு யாழ்ப்பாணத் தாதிகள் பாடசாலையின் முதலாவது பட்டதாரிகள் பட்டமளிப்பு விழாவின் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசும்பொழுது குறிப்பிட்டார். இவ்விழாவிற்கு யாழ்ப்பாண சுகாதார அத்தியட்சகர் டாக்டர் ஜி. என். ஆர். நெதானியல் தலைமைவகித்தார். பட்டம் பெற்ற தாதிகளின் பெற்றோர், யாழ்ப்பாணம் மாவட்டத்திலுள்ள அரசினர் ஆஸ்பத்திரி டாக்டர்கள், ஆஸ்பத்திரிக் கமிட்டி அங்கத்தவர்கள், மற்றும் பிரமுகர்களும் சமுகமளித்தனர். இவ்விழாவின் முடிவில் ஒரு சிற்றுண்டி விருந்தும் அளிக்கப்பட்டது.

டாக்டர் கருணாரத்ன மேலும் கூறியதாவது:-

பல கஷ்டங்களுக்குள்ளாக இப்பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டு பல வசதிகளற்றும் இயங்கிக்கொண்டு வருகின்றது. இப்பாடசாலை அதிபர் திருமதி வல்லிபுரத்தின் நியமனத்தில் கூட பல சிக்கல்கள் இருந்தன. இக்கஷ்டங்கள் யாவற்றிற்கும் ஊடாக 21 தாதிகள் திறமைசாலிகளாகப் பட்டம் பெற்று வெளியேறுகின்றனர். அதிலும் செல்வி எஸ். ஏ குறூஸ் என்ற தாதி அகில இலங்கையிலும் பட்டம்பெற்ற 300 தாதிகளிலும் முதன்மையாகச் சித்தியெய்தியமை பாராட்டப்படவேண்டியதே.

பட்டம் பெற்ற தாதிகள் இத்துடன் தங்கள் படிப்புப் பூர்த்தியாகிவிட்டதாகவும் தமது கடமை அதன் அடிப்படையிலேயே மட்டும் கொண்டதாகவும் கருதக்கூடாது. நோயாளர்களுக்கு அதிமுக்கியம் மருந்துகளும் ஊசிகளுமல்ல, தாம் வேற்றிடத்திலிருப்பதாக நோயாளர் யோசிப்பதற்கு இடமளிக்காதிருப்பதே முக்கியம்.

நோயாளர்களை 'வார்ட்டுக்குக்' கொண்டுவந்ததும் 'இன்னென்றுவந்துவிட்டது' என்று ஓர் உயிரற்ற வஸ்துவைக் கருதுவது போல் சொல்லும் பழக்கம் அற்றுப்போகவேண்டும். இதை மறந்தாலொழிய மனமாற்றம் ஏற்படாது. நோயாளர் பிரச்னை மனிதப்பிரச்னை என்பதை மறக்கக்கூடாது.

யாழ்ப்பாணம் சுகாதார அத்தியட்சகர் டாக்டர் நெதானியல் பேசும்பொழுது பின்வருமாறு குறிப்பிட்டார்:-

தாதிகள் தமது சேவையை ஆரம்பிக்கும் பொழுது கவனிக்கவேண்டியன பலவுண்டு. அவர்கள் சமூகத்திற்கும் சுகாதார இலாகாவிற்கும் கடமைப்பட்டவர்களாக இருத்தல்வேண்டும். தமது கடமைகளை சிரமேற்கொண்டு நோயாளர்களின் அன்புக்குப் பாத்திரமானவர்களும், சுகாதார இலாகாவின் மதிப்பையும் பெற்ற கன்னியாஸ்திரி தாதிமாரைப் பின்பற்றும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

உலக சுகாதார ஸ்தாபனத்தைச் சேர்ந்த செல்வி கொண்டமன் பத்திரங்களை வழங்க, இலங்கைச் சுகாதாரக் கல்வி உத்தியோகத்தர் செல்வி பெனடிக்ற் பதக்கங்களை வழங்கினர்.

## நீச்சல் வீரருக்கு வரவேற்பு

சுன்னாகம், புதன்

'பல இன்னல்கள் நம்மைச் சூழ்ந்துள்ள வேளையிலே பழந்தமிழரின் வீர உணர்ச்சியையும், வைராக்கியத்தையும் ஊட்டிய பெருமை ஆனந்தனை ச்சாரும். ஆனந்தனைப் போன்ற இளைஞர்கள் நம்மினத்தை வழி நடத்த வேண்டும்' என்று உடுவில் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் அளவெட்டி அருணோதயாக்க கல்லூரியில் நீச்சல் வீரன் ஆனந்தனுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பின் போது பேசுகையில் கூறினர்.

ஆனந்தனின் வீரச்செயலைப் பாராட்டிப் பலர் பேசினர்.

## பட்டம் பெற்ற தாதிமார்

யாழ்ப்பாணம், புதன்

நேற்று இரவு நடைபெற்ற தாதிமார்களின் பட்டமளிப்பு விழாவில் பின் வருபவர்களுக்கு சுகாதார சேவை அதிபர் டாக்டர் டபிள்யு. ஏ. கருணாரத்ன பரிசில்கள் வழங்கினர்.

பொதுத்தகுதி: செல்வி கே. பார்வதி, மருத்துவத்தாதி: செல்வி பி. சின்னத்துரை, சத்திரசிகிச்சைத்தாதி: செல்வி வி. அன்னரத்தினம், பரீட்சையில் திறமை: செல்வி எஸ். ஏ. குறூஸ், தாய்மார் பிள்ளைகள் கவனித்தல்: செல்வி எஸ். ஏ. குறூஸ்.

## தெரிவு

திருமலை, செவ்வாய்

யாழ்ப்பாணக் கச்சேரியில் காணிப்பகுதியில் கடமையாற்றிய திரு. கே. முருகையா திருக்கோணமலை பட்டணப் பகுதி காரியாதிகாரி பிரிவுக்கு கிராம சேவையாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

## பிரதமரே சமாதானத்தை ஏற்படுத்துவார்

குருநாகலை, புதன்

'சர்வதேசப் பிரச்சனைகளில் தலையிட்டு சமாதானத்தை நிலைநாட்டப் பாடுபட்ட பிரதமர் சிறிமா பண்டாரநாயக்காவினுல் தான் இந்த நாட்டிலும் சகல இன மதத்தவர்களிடையே சமாதானத்தை ஏற்படுத்த முடியும்' என குருநாகலை எம். பி. திரு. ஜெயபத்திரானு இங்குவுள்ள திருக்குடும்ப கன்னியாஸ்திரி மடப்பாடசாலையில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டி பரிசளிப்பு விழாவில் பேசுகையில் கூறினர்.

திரு. ஜெயபத்திரானு மேலும் பேசுகையில் கூறியதாவது:

இலங்கை சிறிய நாடு. இந்த நாட்டில் மக்கள் வாழ வேண்டியது அவசியம். இங்குள்ள சமுகங்களுக்கிடையே சமாதானத்தை ஏற்படுத்துவது இன்று மிகவும் முக்கியமாக இருக்கிறது. நாட்டு மக்களின் நல்லெண்ணத்தைப் பெற்றுள்ள பிரதமரால் தான் எவ்வித முயற்சி சாத்தியமாகும்.

### ஒற்றுமை அவசியம்

தேசிய பிரச்சனைகளைத் தீர்த்து நாட்டை சோஷலிச பாதையில் வழி நடத்திச் செல்ல நாட்டு மக்களிடையே ஒற்றுமை அவசியம். இங்குள்ள சமூகங்களிடையேயும் வெவ்வேறு மதத்தவர்களிடையேயும் சந்தேகமும் வேற்றுமையும் நிலவும்வரை நாடு முன்னேற்றமடையாது.

# ‘கட்சிக் கூட்டத்துக்கு இனி வரமாட்டேன்’

## அரசாங்கட்சி கொறடாவுக்கு உதவி சபாநாயகர் கடிதம்

கொழும்பு, புதன்

அரசாங்க பார்லிமெண்டரிக் கட்சிக் கூட்டங்களில் நிலவும் 'துரதிர்ஷ்டவசமான நடவடிக்கைகள்' காரணமாக அரசாங்க பார்லிமெண்டரிச் குழுக் கூட்டங்களில் தாம் இனிக் கலந்து கொள்ளப் போவதில்லையென்று உதவி சபாநாயகர் திரு. ஹியூ பெர்ணன்டோ அரசாங்கக் கட்சிப் பிரதம கொறடோவுக்கு எழுதியுள்ள ஒரு கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

"நாங்கள் அரசாங்கக் கட்சிக் கூட்டமொன்றையாவது இதுவரை குறிப்பிட்ட நேரத்தில் ஆரம்பிக்க முடியாமல் போனதும் ஒரு கூட்டத்தையாவது ஒழுங்கான முறையில் நடத்த முடியாமல் போனதும் வருத்தத்துக்குரியது" என்று திரு. பெர்ணன்டோ தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

கூச்சல், குழப்பம், மிரட்டல் ஆகியவைகளுக்கு அரசாங்கக் கட்சிக் கூட்டங்கள் பெயர் பெற்றவையெனறும் கட்சியில் புதிதாகச் சேர்ந்த ஒருவர் கூட்டத்தைக் கண்டு அதிர்ச்சி யடைந்தாரெனினும் 'சுறிக்கடை' என சுருக்கமாக வர்ணித்தார் என்றும் திரு. பெர்ணன்டோ தெரிவித்துள்ளார்.

'அரசாங்கக கட்சிகூட்டங்களின் நிலைமையை உங்களுடைய கவனத்துக்குப் பலதடவைகளில் கொண்டுவந்திருக்கிறேன். நிலைமையைச் சீராக்க வேண்டிய பொறுப்புடைய உங்களால் சீர்செய்ய முடியாதிருக்கிறது. எனவே ஆட்சேபனையைத் தெரிவிக்குமுகமாகவும் விரக்தி காரணமாகவும் நான் இனி மேல் அரசாங்க கட்சிக் கூட்டங்களுக்குச் சமுகமளிக்க மாட்டேன்" என்று திரு. பெர்ணன்டோ தமது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## பிரியுபசாரம்

திருமலை, செவ்வாய்

மூதூர்க் காரியாதிகாரி திரு. கே. செல்வரட்னம் மெபாத்துவில் காரியாதிகாரியாக இடமாற்றஞ் செய்யப்பட்டுள்ளதால்! அவருக்கு பிரிவுபசாரம் அளிக்கப பல கழகங்களும், சமாஜங்களும் ஒழுங்கு செய்துள்ளன.

## வறுமை நிலையை கண்டறிய ஆராய்ச்சி

லக்னோ, ஏப். 2

உத்திர பிரதேசராஜ்யத்தில் தேவ்ரியா, ஆஜம்கா, ஜாவன்பூஸ், காசிபூர் ஜில்லாக்களில் வறுமையினுல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் எந்த மாதிரியில் செலவு செய்கிறுர்கள் என்பதைக் கண்டறிய உத்திர பிரதேச ராஜ்ய சார்க்கார் சர்வே நடத்தும்.

இப்பிரச்னை சம்பந்தமாக ஏற்கனவே திட்டக்கமிஷன் ராஜ்ய சர்க்கார் ஆகியவற்றின் சார்பில் அமைக்கபபட்ட கூட்டு ஆராய்வு கோஷ்டிகள் இப்பகுதிகளுக்கு விஜயம் செய்து மக்களின் நிலைபற்றி நேரில் கண்டறிந்தன. இக் கோஷ்டிகள் மீண்டும் இப்பகுதிகளுக்குச் செல்லும்.

உத்திர பிரதேச ராஜ்ய கிழக்குப் பகுதிகளில் மக்கள் மிகவும் வறுமை நிலையில் உள்ளதாக மக்கள் சபையில் காங்கிரஸ் மெம்பர் எடுத்துக் கூறியதைத் தொடர்ந்து மேற்படி ஆராய்வு கோஷ்டிகள் நியமிக்கப்பட்டன.

## ‘நோயாளர் மட்டும்தான் இங்கு வாழ்கிறுர்களா?’

பிரின்தா, புதன்

'ஆஸ்பத்திரிகளின் தேவை இலங்கையில் அதிகரித்துவருவதைப்பார்த்து நோயாளர் மட்டும்தான் நமது நாட்டில் வாழ்கிறுர்களா என்ற சந்தேகம் சில சமயங்களில் எனக்கு ஏற்பட்டதுண்டு' என சுகாதார மந்திரி ஏ. பி. ஜெயசூரியா கிரிந்தாவில் ஒரு பிரவச ஆஸ்பத்திரி கட்டுவதற்கான அடிக்கல்லை நாட்டிப் பேசுகையில் கூறினர்.

சுகாதார மந்திரி மேலும் பேசுகையில் கூறியதாவது:

### கசிப்பு

கசிப்பு சிறிதுநேர ஆனந்தமயக்கத்தைக் கொடுத்தாலும் அதன் விளைவு மிகவும் கொடுமையாக இருக்கும். கசிப்பு தொடர்ந்து அருந்தியதால் காசநோயால் அவதிப்படுபவர்களை நான் அறிவேன்.'

லண்டன், ஏப்.

இந்தோனேஷியாவும் பிலிப்பைன்ஸும் ஒரு பொது உடன்பாட்டு ஒப்பந்தமொன்று செய்துள்ளது.

# ‘மந்திரிகளும் எம். பி. க்களும்’ சுகபோகவாழ்வு வாழ்கின்றனர்

## மாநகரசபை அங்கத்தவர் கண்டனம்

களிகமுவா, புதன்

'மந்திரிகளும் எம். பி.க்களும் இளவரசர்கள் போன்று சுகபோக வாழ்வு வாழ்கின்றனர். இவ்விதம் அவர்கள் வாழ்ந்துகொண்டு ஏழைமக்களிடம் அரசாங்கத்துக்கு நன்கொடை கொடுக்கச் சொல்லி கேட்கிறுர்கள். இந்த ஏழை மக்கள் கொடுப்பதற்கு எதை வைத்திருக்கிறுர்கள் என நான் கேடக விரும்புகின்றேன்.

இவ்வாறு மாநகரசபை அங்கத்தவர் திரு. ஆர். பிரேமதாசா இங்குள்ள அம்பன பிட்டியா குருப்பில் யு. என். பி. சார்பில் இயங்கும் தொழிற்சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

திரு பிரேமதாஸா மேலும் பேசுகையில் கூறியதாவது:

யு. என். பி. தொழிற் சங்கங்கள் தொழிலாளர் நலன் கருதியே இயங்கிவருகின்றன. மற்றகட்சிகள் தமது அரசியல் நோக்கங்களை ஈடேற்றவே இவ்வித சங்கங்களை நடத்துகின்றன.

திருமதி விமாலாகன்னங்கரா பேசுகையில் யு. என். பி. யின் தொழிலாளர் சங்கத்தில் எந்தக் கட்சி சார்புள்ளவரும் சேர்ந்து கொள்ளலாமென்றும் யு. என். பி. தொழிலாளர் சங்கத்தில் அரசியல், வகுப்பு, நிறபேதங்கள் கிடையாது என்றும் கூறினர்.

# காவலாளர் கைது

## லாவோஸ் மந்திரி கொலையின் எதிரொலி

வியண்டைன், ஏப்ரல் 3

**லாவோஸ் வெளிவிவகார மந்திரி வால்சேனு சென்ற திங்கட்கிழமை இரவு சுட்டுக் கொலை செய்யப்பட்டது சம்பந்தமாக அவரது வீட்டுக் காவலாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.**

இந்த இளம் காவலாளர் மந்திரி வால்சேனுவை இயந்திரத் துப்பாக்கியால் சுட்டு விட்டுத்தாமும் சுட்டுத் தற்கொலை செய்ய எத்தனித்த போது தடுத்து நிறுத்தப்பட்டு கைது செய்யப்பட்டார்.

### வெளிநாட்டுத் தூண்டுதல் காரணம்

இவ்வித சதி வேலைகளுக்கு வெளிநாட்டுத் தூண்டுதல் காரணம் என அரசாங்கத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் எந்த நாடும் குறிப்பிடப்படவில்லை.

ஜெனிவா மகாநாட்டு ஒப்பந்தத்துக்கு கேடு விளைவிக்கவும் லாவோஸின் நடுநிலைமைக் கொள்கையை சிதைக்கவுமே இவ்வித சதி வேலைகள் இடம் பெறுவதாகவும் அரசாங்கத்தரப்பில் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வெளிவிவகார மந்திரி மரணமானது குறித்து துக்கம் தெரிவிக்கு முகமாக லாவோஸில் அரசாங்க காரியாலயங்களில் தேசியக் கொடிகள் அரைக் கம்பத்தில் பறக்க விடப்பட்டன. அரசாங்க அலுவல்கள் ஒத்தி வைக்கப்பட்டன.

துப்பாக்கிப் பிரயோகத்தினால் காயமுற்ற திருமதி வால்சேனு சிகிச்சை பெற்றுவருகிறார்.

---

## எந்த மொழியிலும் அடிக்கவல்ல டைப்ரைட்டர்

ஆக்ரா, ஏப். 2

எந்த மொழியிலும் அடிக்கத்தக்க ஒரு சர்வதேச ஒலிப்பு எழுத்துமுறை டைப்ரைட்டரை, கே. எம் கழகம் தயாரித்துள்ளது. இக்கழகம், இந்தி மற்றும் இதர வட்டார மொழி ஆராய்ச்சியில் ஈடுபட்டு வருவதாகும். உலகில் முதன் முதலாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இந்த டைப்ரைட்டரை ரூ. 5000 செலவில், லண்டனிலுள்ள இம்பீரியல் டைப்ரைட்டர் கம்பெனி தனிச்சிறப்புடன் செய்துள்ளது. இப்பொறியிலுள்ள தட்டெழுத்துக் கட்டை வரிசை ரோமானிய எழுத்துக்களில், பல்வேறு விதமான ஒலிகளுக்குக் குறிகளாக அமையும்படி அமைக்கப்பெற்றிருக்கும். ஒலியை அடிப்படையாகக் கொண்டு ஒலிக்குறிகளாக எழுத்துக்கள் அமையப் பெற்ற இப்பொறியைக் கொண்டு உலகின் எந்தமொழியிலும் டைப் அடிக்கலாம்.

---

## காமென்வெல்த் வர்த்தக மந்திரிகள் மகாநாடு

லண்டன், ஏப். 3

அடுத்த மாதம் 13, 14-ம் திகதிகளில் காமென்வெல்த் நாடுகளின் வர்த்தக மந்திரிகள் மகாநாடு ஒன்று லண்டனில் நடைபெறவிருக்கிறது

1960-ம் வருடத்துக்குப் பின்னர் இடம் பெறும் இரண்டாவது மகாநாடு இது.

இந்த மகாநாட்டில் முக்கியமாக வர்த்தக சம்பந்தமான விஷயங்கள் ஆராயப்படவிருக்கின்றன.

---

## யேமன் இமாம் தற்கொலை

ஏடன், ஏப். 2

யேமனின் இமாம் பதவியிலிருந்து, பதவி விலக்கம் செய்யப்பட்ட, யேமனின் முன்னாள் இமாம் முகம்மது அல் - பதர் தற்கொலை செய்துகொண்டதாக அராபியத் தினசரி "சலியாம்" தெரிவிக்கிறது. யேமனின் தலைநகரான ஸ்னாவிலிருந்து வரும் யாத்திரிகர்கள் இமாம் அல் - பதர் தற்கொலை செய்துகொண்டதாக அதிகார வட்டாரங்களிலேயே பேச்சு அடிபடுவதாகக் கூறியதாக அப்பத்திரிகை எழுதியுள்ளது. இச் செய்தியை உண்மையென உறுதிப்படுத்த ஏடன் அதிகாரிகளால் இயலவில்லை. யேமனில் முடியாட்சி நிறுவப் போரிட்டவர்களில் இமாம் அல்-பதர் முக்கியமானவர்.

---

## ஹங்கேரிய விடுதலை புரட்சியாளர் விடுதலை

வியன்னா, ஏப். 2

தற்போது உண்டான குற்ற மன்னிப்பு ஒப்பந்தத்தின் படி ஹங்கேரிய விடுதலைப் புரட்சியாளர் சிறையிலிருந்து விடுதலையாகும் செய்தியை அறிய இங்குள்ள நாடுகடத்தப்பட்ட ஹங்கேரியர் ஆவலுடன் உள்ளனர்.

இம்ரே நாகியின் அரசாங்கத்தில் அமைச்சராக இருந்து 1957-ல் ஆயுள் தண்டனை விதிக்கப்பெற்ற இஸ்த்தான் பீபோ விடுதலை செய்யப்பட்டு விட்டார் என்று அண்மையில் வந்த செய்திகள் கூறுகின்றன.

ரஷ்யர்கள் ஹங்கேரியப் புரட்சியை அடக்கிய பின், உண்டான ஒரு நிகழ்ச்சியில் உலகையே ஹங்கேரியப் பக்கம் திருப்பியவர் பீபோவாகும், தன்நாட்டை நடுநிலை நாடாக ஆக்கவேண்டுமென்று அவர் சிறையிலிருந்து இரகசியமாக உலகத்துக்கு விடுத்த அழைப்புக்கடிதம் பெயர் பெற்றதாகும்.

இவர் போன்று இன்னும் பலர் விடுதலையாகிக் கொண்டுள்ளதாகச் செய்திகள் வந்த வண்ணம் உள்ளன.

---

## சிறைக் கைதிகள் தப்பினர்

புதுடில்லி, ஏப்ரல் 3

இந்தியாவுக்கும் சீனாவுக்குமிடையே நடைபெற்ற எல்லைச் சண்டையின்போது தேஜ்பூர் சிறையில் காவலில் வைக்கப் பட்டிருந்த 500 சிறைக் கைதிகள் தப்பிச் சென்றதாகவும் இவர்களில் அரைவாசிப் பகுதியினர் மீண்டும் கைது செய்யப் பட்டுவிட்டதாகவும் அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தக் கைதிகளை வேலூர் இடத்துக்கு கூட்டிச் சென்ற போதே இவர்கள் தப்பிச்சென்றார்கள்.

---

## 4 ஆயிரம் கைதிகள் ரத்ததானம்

லக்னோ, ஏப். 2

உத்திர பிரதேச ராஜ்ய சிறைகளில் உள்ள கைதிகளில் சுமார் 4 ஆயிரம் பேர் இந்திய ராணுவ வீரர்களுக்காக ரத்ததானம் அளிக்க முன்வந்துள்ளனர். இச் சிறைகளில் உள்ள கைதிகளும், சிறைச்சாலை சிப்பந்திகளும் இதுவரை பாதுகாப்புநிதிக்கு ரூ. 40 ஆயிரத்துக்கும் மேல் அளித்துள்ளனர், இது தவிர சுமார் 22 ஆயிரம் சிறைக் கைதிகள் தங்களுக்கு அளிக்கப்படும் உணவில் ஒரு பகுதியை குறைத்துக் கொள்ள தாங்களாக முன்வந்துள்ளனர். இதன் மூலம் மிச்சப்படும் ரூ. 2 லட்சம் தொகை யுத்த நிதிக்கு அளிக்கப்படும்.

மற்றும் 5 ஆயிரம் கைதிகள் சீனர்களை எதிர்த்துப் போராட ராணுவத்தில் சேர முன்வந்துள்ளனர்.

---

## திபேத்தியக் குழந்தைகளுக்கு ஜெர்மனியில் தஞ்சம்

பெர்லின், ஏப்ரல் 2

ஒரு திபேத்தியத் தம்பதிகளுடன், 12 திபேத்தியக் குழந்தைகள் ஜெர்மனியிலுள்ள பவேரியன் ஆல்ப்ஸ் பகுதியிலிருக்கும் ஒரு சிற்றூரில் புது வாழ்க்கை தொடங்குவதற்கென வந்துள்ளனர். இவர்களுடன் ஒரு லாமாவும் வந்திருக்கிறார்.

இவர்களுக்கெனத் தனியாக ஒரு வீடும் கட்டப்பட்டுள்ளது. சென்னையைச் சேர்ந்த ஏ. ஏ. செட்டியார் என்னும் வணிகர் திபேத்திய அகதிகள் இந்தியாவிலிருந்து ஜெர்மனி செல்ல ஆகும் செலவை ஏற்றுக் கொண்டுள்ளார். முனிச் நகர மேயர் இந்தச் செலவுக்கென மேலும் 16 ஆயிரம் மார்க் கொடுத்துள்ளார்.

மேற்படி சிற்றூரில் அந்தக் குழந்தைகள் திபேத்தியச் சூழலில் வளர்வார்கள். 20 திபேத்தியச் சிறுவர்கள் தற்போது பிரான்ஸில் வாழ்கின்றனர்.

---

## 4-வது ராக்கெட் ரஷ்யா அனுப்பியது

### 'சந்திர மண்டலத்தை அடையலாம்'

மாஸ்கோ, ஏப்ரல் 3

ரஷ்யா சந்திர மண்டலத்தையடையு முயற்சியில் தனது நான்காவது ராக்கெட்டை நேற்று வானவெளிக்கு அனுப்பியது.

இந்த ராக்கெட் பூமியைச் சுற்றும் செயற்கைக் கிரகத்திலிருந்து தீர்க்கப்பட்டது.

மனிதனின்றி இயங்கும் இந்த ராக்கெட்டில் கால்கள் பொருத்தப்பட்டுள்ளன.

இந்த ராக்கெட் நிர்ணயிக்கப்பட்ட இடத்திற்குச் சென்று கொண்டிருப்பதாக அவதானிகள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

---

## மாஸேதுங்கிற்கு மாஸ்கோ அழைப்பு

மாஸ்கோ, ஏப்ரல் 3

சீன கம்யூனிஸ்ட் கட்சித் தலைவரான மாஸேதுங்கை ரஷ்யாவுக்கு விஜயம் செய்யுமாறு ரஷ்யா அழைப்பு விடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இரு நாடுகளுக்கிடையேயுள்ள நட்புறவைப் பலப்படுத்திக் கொள்ளும் வகையில் இந்த ஒழுங்கு மேற்கொள்ளப் பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

---

## காரைக்குடியில் கம்பன் விழா நிகழ்ச்சிகள்

காரைக்குடி, ஏப். 3

காரைக்குடி கம்பன்கழக ஆதரவில் கம்பன் திருநாள் இம்மாதம் 5, 6, 7, 8-ந் திகதிகளில் நடைபெறவிருக்கிறது. காரைக்குடி மீனாட்சி உயர்நிலைப் பெண்பாடசாலை மண்டபத்தில் கம்பன் திருநாள் கொண்டாடப்பட விருக்கிறது. நான்கு தினங்களும் கம்பன் விழாவை வெகுசிறப்பாக நடாத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கம்பன் திருநாள் முதல் நாள் நிகழ்ச்சிகள் காலை 9 மணிக்கு ஆரம்பமாகும். இறை வணக்கம், மலர் வணக்கம், வரவேற்புரை, தொடக்கவுரை, தலைவர் உரை, சொற்பொழிவு என்பன காலையில் நடைபெறும். காலை நிகழ்ச்சிகளுக்கு திரு. பி. எஸ். கைலாசம் தலைமை வகிப்பார். மாலையில் திருவாளர்கள் க.கு.கோதண்டராமன், மா. முத்தையா, மு. இராமசாமி, சே. நா. விஜயராகவன், ம. பொ. சிவஞானம், திருமதி தி. சிவகாமசுந்தரி ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

சனிக்கிழமை இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும்போது பேராசிரியர் அ. சீனிவாசகராகவன் தலைமையில் கவியரங்கம் நடைபெறும். கவியரங்கில் திருவாளர்கள் பூ. அமிர்தலிங்கன், சௌந்தரம் கைலாசம், எஸ். சாரதா, சே. ர. குமாரசாமி, கம்பராமன், கருப்பட்டிக் கவிராயர் ஆகியோர் பங்குபற்றுகின்றனர்.

மாலையில் பேராசிரியர் அ. ச. ஞானசம்பந்தன் தலைமையில் திருவாளர்கள் க. குழந்தைநாதன், ஆ. செ. தட்சிணாமூர்த்திக் கவுண்டர், ப. ஜனார்த்தனம், எஸ். இராமகிருஷ்ணன், திருமதி ஆ.ரா. இந்திரா ஆகியோரின் சொற்பொழிவுகள் இடம்பெறும்.

ஞாயிற்றுக்கிழமை மூன்றும் நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும், வித்துவான் கி. வ. ஜகந்நாதன் தலைமையில் பட்டிமண்டப நிகழ்ச்சிகள் நடைபெறும். வீரருள் சோழை எவர் இலக்குவனா? சுக்கிரீவனா? இராவணனா? என்னும் பொருள் பற்றி விவாதிக்க பட்டிமண்டபத்தில் எஸ். இராமகிருஷ்ணன், அ. ச. ஞானசம்பந்தன், அ. சீனிவாசராகவன், சிவகாமசுந்தரி, பழ. பழநியப்பன், ஆ. ரா. இந்திரா, எஸ். கே. இராமராசன், கு. அருணாசலக் கவுண்டர், க. கு. கோதண்டராமன், மு. இராமசாமி, சு. குழந்தைநாதன். அன்பு வேதாசலம் ஆகியோர் கலந்து கொள்வர்.

இறுதிநாள் நிகழ்ச்சிகள் நாட்டரசன் கோட்டை கம்பன் கோயிலில் நடைபெறும். பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் விழாவுக்குத் தலைமை வகிப்பார். கம்பன் கோயிலில் வழிபாடு முடிந்ததும் திருவாளர்கள் அ. சீனிவாசராகவன், அன்புவேதாசலம், தொ. மு. பாஸ்கரத்தொண்டைமான், அழ. பழநியப்பன், கா. நயினார் முகம்மது, கு. அருணாசலக்கவுண்டர் ஆகியோர் உரைநிகழ்த்துவர்.

---

## ஆர்ஜெண்டைனாவில் ராணுவப் புரட்சி

புவனஸ் அயர்ஸ், ஏப்ரல் 3

**ஆர்ஜெண்டைனாவில் நேற்று திடீர் ராணுவப் புரட்சி ஒன்று இடம் பெற்றது. ராணுவப் படையினர் மூன்று வானொலிகளைக் கைப்பற்றியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது**

பெரோனின் சர்வாதிகார ஆட்சியை எதிர்த்ததற்காக இரு வருடத்துக்கு முன் சிறை தண்டனை விதிக்கப்பட்ட ஜெனரல் பெஞ்சமின் மெனன்டாஸ் தலைமையில் இந்த புரட்சி இடம் பெற்றது.

ராணுவப் புரட்சிக் காரர் தமது புரட்சி வெற்றிபெற்றதாகத் தெரிவித்திருந்த போதிலும் தற்பொழுதுள்ள ஆர்ஜெண்டைனா அரசாங்க ஜனாதிபதி அவ்விதம் ராணுவப் படையினரின் புரட்சி வெற்றி பெறவில்லை யென்றும் ராணுவப்படையினருக்கும் அரசாங்க படையினருக்குமிடையே நேரடி மோதல் ஏதும் இடம் பெறவில்லையென்றும் முப்படையினரைச் சேர்ந்த பலர் தமக்கு விசுவாஸமாக இருப்பதாகவும் அறிவித்துள்ளார்.

தரைப்படையினரையும், விமானப் படையினரையும், கடற் படையினரையும், கொண்ட முப்படைக்கூட்டு அணி ஒன்றுடன் தாம் தொடர்பு கொண்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

---

## கல்வி இலாகா வெற்றி

வவனியா, புதன்

வவனியா நீர்ப்பாசன இலாகாவினால் நடத்தப்பெறும் அம்பலவாணர் வெற்றிக் கிண்ணக் கைப்பந்தாட்டப் போட்டியில் கல்வி இலாகாவுக்கும் சிங்கள மகா வித்தியாலய மாணவர்களுக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் அடுத்து இரு ஆட்டங்களிலும் கல்வி இலாகா வெற்றி பெற்றது.

திரு. ஐயம்பிள்ளை மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

---

## ஆஜ்மீரில் பண்டைய மசூதி

ஆஜ்மீர், ஏப். 2

அக்பரின் அரசவை இசைவாணரான புகழ்பெற்ற தான்சேனின் மகள் பீபீ குலாப் தாய் கட்டுவித்த பழங்காலத்து மசூதி ஒன்றை இங்கு கண்டு பிடித்துள்ளனர். இம்மசூதி காலஞ்சென்ற முஸ்லிம் சித்தரான சிஷ்டியின் சமாதிக்கு அருகில் இன்னும் நல்ல நிலையிலிருக்கிறது. இங்கு முஸ்லிம்கள் தொழுகைக்குச் செல்கின்றனர். இம்மசூதியில் காணப்படும் பாரசீக மொழிக் கல்வெட்டிலிருந்து இதைக் கட்டியது சேனின் மகள் என்று தெரியவந்தது.

---

## சூடானில் இந்திய உப ஜனாதிபதி

கார்ட்டூம், ஏப்ரல் 3

சூடானுக்கு விஜயம் செய்துள்ள இந்திய உப ஜனாதிபதி ஸாகிர்ஹுஸைன் சூடானுக்ும் பாரதத்துக்குமிடையே நட்புறவு வளரவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

---

கீரிமலை, புதன்

கீரிமலைச் சிவன் கோவிலில் இன்று விஷ்ணுமூர்த்திக்கென அமைக்கப்பட்ட ஆலயமண்டப கும்பாபிஷேகம் நடைபெற்றது.

### மணி வாக்கு

தெய்வம் எனும் சத்தியத்தின்பால் எனக்குள்ள உறுதியான நம்பிக்கை காரணமாகவே அவமானம், தோல்வி, சங்கடம் இவற்றிடையே என்னால் மனச்சாந்தியுடன் இருக்க முடிகிறது.

— மகாத்மாகாந்தி

ஈழநாடு

EELANADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் சுபகிருது ஆண்டு
பங்குனி மீ 22 உ (4-4-63)

## இலங்கையின் மொழிக்கொள்கை

மொழிபற்றிய கொள்கைதான் இன்று மிக அவசரமாகத் தீர்க்கப்பட வேண்டிய பிரச்னைகளின் ஒன்றாகும். அரசாங்கம், பார்லிமெண்ட்சபை, பொதுமக்கள் இவர்களுக்கு இப்பிரச்னையே அதிக மண்டையிடி அளித்துவருகின்றது.

இதில் இரண்டு அம்சங்களுண்டு. ஒன்று தமிழ்மொழியின் அந்தஸ்து. மற்றொன்று ஆங்கிலத்துக்கான இடம். சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியென்று சட்டமூலம் செய்யப்பட்டுவிட்டது. இந்த நடவடிக்கை நீதியற்றதும் அரசியல் ஞானமற்றதுமாகும். தமிழ்ப்பேசும் சமூகமனைத்தும் இச்சட்டத்தை நீக்கி, தக்க திருத்தம் ஏற்படுத்த வேண்டுமென்று கிளர்ச்சி செய்கின்றது. தமிழ் ஓர் அரசாங்க மொழியாக இருக்க வேண்டுமென்றும் சிங்களமக்களுக்கு சிங்களம் எப்படியோ அது போலவே தமிழ்மக்களுக்குத் தமிழுமாகுமென்றும் தமிழ்ப்பேசும் சமூகம் அனைத்தும் ஏகோபித்துக் கேட்கின்றது. இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் எல்லாரும் இதே கருத்தைக் கொண்டிருக்கின்றார்கள்.

தமிழ் மக்களின் மொழி உரிமைபற்றி பொதுவாகச் சிங்களத் தலைவர்கள் அனுதாபம் காட்டவில்லை. காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்காவால் கொண்டுவரப்பட்ட சிங்களம் மட்டும் மசோதா பிற்போக்கானதாகும். அது வேற்றுமைப்படுத்தும் சட்டம். இலங்கையின் இரு தேசிய மொழிகளையும் அச்சட்டம் வேற்றுமைப்படுத்துவதாகும். நாட்டின் அரசியலமைப்பிலே தமிழுக்கு மிகத் தாழ்வான நிலைக்கு ஒதுக்கிவிட்டது.

மொழிக்குச் செய்த பாதகம் ஒருபுறமிருக்க தமிழ்ப்பேசும் மக்களுக்குப் பெரும் தீங்கு செய்யப்பட்டுவிட்டது. அரசியல் கலாசாரம், பொருளாதாரம், சமூகம், அறிவியல் முதலிய பல்வேறு துறைகளிலும் அவர்களை மிகத் தாழ்ந்த நிலைக்குக் குறைத்துவிட்டது. சிங்களத்தை மட்டும் அரசாங்க மொழியாக்கி, தமிழுக்கு அவ்வித அந்தஸ்து அளிக்காததால், சிங்களத்தின் மதிப்புப் பெரிதும் உயர்ந்து, அரசாங்க உத்தியோகம் பெறுவதில் தமிழ்ப்பேசும் மக்களுக்குப் பல வசதியீனங்களைச் செய்துவிட்டனர்.

அரசாங்க அமைப்பும் நிர்வாகமும், நாட்டிலுள்ள சகல சமூகங்களுக்கும் சொந்தமானது. ஒரு சமூகத்துக்கு மட்டுமல்ல. இந்த முக்கியமான மேலான கொள்கையைப் பொதுவாகச் சிங்களத் தலைவர்கள் அலட்சியம் செய்துவிட்டனர். இதற்கு விலக்காக ஒருசில சிங்களத் தலைவர்கள் உண்டு. தமிழ்ப்பேசும் மக்களுக்கும், தமிழ மொழிக்கும் அநீதி செய்யப்பட்டுவிட்டதை அவர்கள் உணர்ந்துள்ளனர். ஆனால் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை மாற்றும்படி செய்யக்கூடிய அளவு இத்தலைவர்கள் போதிய அளவு தீவிரமாக இருக்கவில்லை. அல்லது அவர்கள் தீவிரமாக இருப்பதாகத் தெரியவில்லை. அவர்கள் உண்மையில் தீவிரமாக இருப்பதாயின் அதை நாம் மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா கொண்டுவந்து நிறைவேற்றிய "நியாயமான தமிழ் உபயோக மசோதா" அநேகமாக செத்துக் கிடக்கிறது. அச்சட்டத்தை அமுல்நடத்த தக்க 'ரெகுலேஷன்' என்ற விதிகள் தயாரிக்கப்பட வேண்டுமென்று சட்டம் கூறுகின்றது. ஆனால் அவ்விதம் ஒருவிதியும் கூடத் தயாரிக்கப்படவில்லை. அச்சட்டம் நிறைவேறி பல மாதங்களாகியும், இன்னும் அவ்வித விதிகள் கொண்டுவரப்படவில்லை. அரசாங்கத்தின் மனச்சத்தியையும் உண்மையையும் இது காட்டுவதாக இல்லை. இது வருந்தத்தக்க நிலையாகும். இத்துடன் மட்டுமல்ல, தமிழ் உபயோகம்பற்றி யோசனை கூற நியமிக்கப்பட்ட உபகமிட்டியின் சிபார்சுகளை பொதுமக்களுக்கு வெளியிடவோ, பார்லிமெண்டில் சமர்ப்பிக்கவோ அரசாங்கம் முன்வரவில்லை.

தனிச்சிங்களச் சட்டத்தை நீக்கி, தமிழுக்குச் சரியான இடம் அளிக்கக்கூடியதான ஒருசட்டம் கொண்டுவரப்பட வேண்டுமென்று கேட்பதில் தமிழ் அரசியல்வாதிகள் மட்டுமன்றி, தமிழ்ப் பொதுமக்களும் ஐக்கியப்பட்டுள்ளனர். அரசாங்கமோ, அரசாங்கக் கட்சியோ, அல்லது சிங்களவரின் எந்த ஸ்தாபனமோ இக்கோரிக்கைக்கு எவ்விதமும் செவிசாய்க்கவில்லை. இவ்விதநிலை நீடிப்பது மிகவும் துரதிருஷ்டவசமாகும். தமிழ்மக்களின் மொழிபற்றிய நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான வழிவகைகளைச் செய்ய சிங்கள சமூகம் இனியும் தயக்கம் செய்யாமல் முன்வர வேண்டியது அவசியமாகும். இலங்கையிலே மொழிப்பிரச்னை தக்கபடி தீர்க்கப்படாவிடில் மற்ற உள்நாட்டுப் பிரச்னைகளும் வெளிநாட்டுப் பிரச்னைகளும் தீரமுடியாமல் நாட்டுக்குப் பெரும் பாதகம் ஏற்படுவதாக இருக்கும்.

# கங்கை-சமுத்திர சங்கமத்தில் கோயில் கொண்ட சோமாஸ்கந்த மூர்த்தி

(சிவாச்சாரிய சுப்பிரமணிய சர்மா)

**சோமாஸ்கந்த மூர்த்தி சிறப்புற அமைந்த சப்தவிடங்க ஸ்தலங்களில் திருவாரூர் ஒன்றாகும். திருவாரூரில் இருந்த மனுநீதிகண்ட சோழர் பரம்பரையினரான வரராம தேவர் குளக்கோட்டன் என்னும் அரசர்களே திருக்கோணமலைச் சிவாலயத்தை அமைத்தார்கள் என்று ஒரு வரலாறு உண்டு. திருவாரூர் அரச பரம்பரையினராதலால் போலும் தமதூரைப்போன்றே தியாகராசமூர்த்திப் பிரதான்யமான 'சூடாமணிச்சபை' என்னும் இவ்வாலயத்தை அமைத்து சோமாஸ்கந்த மூர்த்தியையே இங்கும் பிரதிட்டை செய்தார்கள்.**

குரைகடலோத நித்திலங் கொழிக்கும் கோணமாமலையிற் கோயில்கொண்டெழுந்தருளிய ஸ்ரீதட்சிண கைலாசநாதருக்கும் பிடியன்ன மென்னடை பயில் மாதுமை அம்மையாருக்கும் மகாகும்பாபிஷேகம் நடைபெறும் இத்தினம் இந்துக்களுக்கு ஒரு நற்தினமாகும். இத்தலம் மூர்த்திதலம் தீர்த்தம் என்னும் மூன்று மகிமைகளும் தன்னிடத்தே பொருந்தப்பெற்றுள்ளது. முன்னொருகாலத்திலே ஆதிசேடனும் வாயு பகவானும் ஒருவரோடொருவர் பகைமை கொண்டு கலகம் விளைத்த பொழுது வாயுவினால் பிடுங்கி வீசப்பெற்ற கைலாய சிகரம் மூன்றனுள் தென்சமுத்திரத்தில் வீழ்ந்தது. திருக்கோணமலைச் சிகரம் எனப் புராணங்கள் கூறும். திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளினால் தேவாரப் பதிகம் பாடப்பட்டமையினாலும் தல விசேஷமுடையது.

மேலும், மகாவலிகங்கை பாவநாசம் கன்னியா தீர்த்தம் கங்காசாகர சங்கமம் என்னும் தீர்த்தங்களைத் தன்னிடத்தில் பொருந்தப்பெற்றமையினால் தீர்த்த விசேஷமுடையது.

சிவபிரானால் இராவணனுக்கு கொடுக்கப்பட்ட கேடீஸ்வரலிங்கமும், சிவபிரான் விஷ்ணு, பிரமா இவர்களின் பேரால் ஸ்தாபிக்கப்பெற்றுள்ள பிணகிலிங்கம் உருத்திரேசலிங்கம் பூதேசலிங்கம் அகஸ்தியரால் ஸ்தாபிக்கப்பெற்ற தீர்த்த உடையவர் என்னும் சிவலிங்க மூர்த்திகளைத் தன்னிடத்தே பொருந்தப்பெற்றுள்ளதால் மூர்த்தி விசேடமுடையது.

இத்தலத்திலுள்ள மற்றொரு விசேஷ மூர்த்தி சோமாஸ்கந்த மூர்த்தி ஆகும். இதன் வரலாறு பின்வருமாறு:-

இந்தியாவிலே நடராஜ மூர்த்தியைப் பிரதானமாகக் கொண்டுள்ள சிதம்பரம் முதலிய பஞ்சசபைகள் உள்ளன; சோமாஸ்கந்த மூர்த்தியென்னும் தியாகராச மூர்த்தி பிரதானமான திருவாரூர் முதலிய ஏழு விடங்கஸ்தலங்கள் உண்டு. விடங்கம் என்பது உளி சிற்பாசாரிமார் உலோகமூர்த்திகளைப் பெரும்படியாக வார்த்துப் பின் உளி வேலை செய்து கடைந்து சித்திரிப்பார்கள். அங்ஙனம் உளிவேலை செய்யாது மிகச் சாதுரியமான சிற்பியினாலே அற்புதமாக வார்த்தெடுப்பதும் உண்டு. இதிற் பின்பு உளிவேலை செய்வதில்லை. இதுவே விடங்க மூர்த்தியாகும். இத்தகைய விடங்கமூர்த்திகளான சோமாஸ்கந்த மூர்த்தி விசேடமாயிருக்கும் ஏழு இடங்களையே ஸப்தவிடங்கஸ்தலம் என்பர். இவற்றிலொன்றான திருவாரூரிலிருந்த மனுநீதிகண்ட சோழர் பரம்பரையினரான வரராமதேவர் குளக்கோட்டர் என்னும் அரசர்களே திருக்கோணமலைச் சிவாலயத்தை அமைத்தார்களெனச் சரித்திரம் கூறுகின்றது.

வீதி விடங்கப்பெருமானுக்கு விசேட தலமாகிய திருவாரூர் அரச பரம்பரையினராதலால் தமதூரைப் போலவே தியாகராசமூர்த்தி பிரதானமான "சூடாமணிச்சபை" என்னுமிவ்வாலயத்தை அமைத்துச் சோமாஸ்கந்த மூர்த்தியையே பிரதான மூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்தார்கள். சோமாஸ்கந்த மூர்த்தியே கைலாச மூர்த்தியாகும் என்பது பின்வரும் கந்தவிரதப் படலச்செய்யுளாலும் அறியலாம்.

"எயிலையங்கெரி யூட்டிய
கண்ணுதலிமைய
மயிலுமைந்த னுமொருபுடை
மகிழ்வுடன் மேவக்
கயிலையின்கணே யமர்தல்
போவிருத்தலுங்கண்டான்
பயிலுமன்புடை மன்னவன்
பரவசமானன்"
(கந்தபுராணம்)

இங்ஙனம் கைலாசத்தோற்றத்தோடு திருக்கோணமலைச் சிகரத்தில் எழுந்தருளியிருப்பதாலும் தட்சிணகைலாசம் என்ற பெயர் இதற்குப் பொருந்தும்.

சோமாஸ்கந்த மூர்த்தியே இத்தலத்திற் பிரதானமூர்த்தி என்பதற்கு மற்றுமொரு வரலாறும் ஆதாரமாயிருக்கின்றது. பறங்கியரால் இவ்வாலயத்திற்குப் பங்கம் வந்தபொழுது பிரதானமாக இச்சோமாஸ்கந்த மூர்த்தியை எடுத்துக்கொண்டுபோய் வேறிடங்களில் வைத்துப் பூசித்தார்களென்பது அது திரிகோணசலபுராணத்துள்ள பின்வருஞ் செய்யுட்களால் நன்கு விளக்கமாகின்றது.

திரிகோணசல புராணம் நைமித்திக படலம் (செ. து. க.)

ஆன சிற்சில பகல்
கழிந்தி ஒருலுமடாத
வீனர் செய்யனு சிதங்களுக்
கஞ்சியேயெமையாள்
வானவன்றனை மங்கையை
மகவொடு மகேடுசென்
றானமற்ற செங்கடக
மாநகரிடை யுற்றார்"

தம்பல நகர் படலம்:-

"விண்ணோர் வியக்கும்படி
கோயில் விதியிற் செய்து
முடித்ததற்பி
னெண்ணார் புரமூன்றெரித்
தருமீசன் றன்னைத்
தேவியொடுஞ்
தண்ணார் நீபமலர் மாலைத்
தனயனோடுந்
தகுமுறையே
பண்ணார் மறையோரா
லமைக்கொடுதாபித்துப்
பரிவாற் போற்றினேனே"

இந்தச் செய்யுட்களிலே கூறப்பட்ட மூர்த்திகள் சோமாஸ்கந்த வடிவமேயாகும் இது பிரதான மூர்த்தியாயிருந்தபடியாற்றான் கோயில் பழுதடைந்த பொழுது அதை எடுத்துக் கொண்டுபோய் வேறிடத்தில் பிரதிஷ்டை செய்து பூசித்தார்கள்.

சமீப காலத்தில் மூலஸ்தானத்தின் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்யுமுன் தம்பலகாமம் கோணேஸ்வரர் கோயிலில் மூலமூர்த்தியாகப் பூசிக்கப்

(5-ம் பக்கம் பார்க்க)

### ஐயா ... எழுதுவது

புதுவருடப்பிறப்பு நெருங்கி வருகிறது. ஒரு கொழும்பு வர்த்தகர், தமது சிப்பந்திகளுக்கு வருடாவருடம் சாரம் வாங்கிக்கொடுப்பது வழக்கமாம். இம்முறை உள்நாட்டுச் சாரத்தின் விலை மிக உயர்ந்துவிட்டதாயும், வேட்டியே எங்கும் கிடைக்கவில்லை என்றும், ஆகவே சாரத்துக்குப் பதில், பணமாகக் கொடுத்துவிடத் தீர்மானித்திருப்பதாகவும் சொன்னார்! பாவம் சிப்பந்திகள்!

விலைவாசிகள் இப்படி உயர்வதற்கு யார் காரணம்? வர்த்தகர்கள்தானென்றும், அவர்களில் சிலர் பொருள்களைப் பதுக்கிவைத்து கொள்ளை லாபம் தட்டப்பார்க்கிறார்கள் என்றும் பிரதம மந்திரி வர்த்தகர்மீது குற்றம்சாட்டுகின்றார்.

ஆனால் வர்த்தகர்களோ பிரதமரின் இந்தக் குற்றச்சாட்டை மறுக்கிறார்கள். தாங்கள் பதுக்கவில்லை என்றும், தங்களுக்கும் சரக்குகள் கிடைக்காமல் தட்டுப்பாடாக இருக்கிறதென்றும் கூறுகின்றனர். இறக்குமதியை அரசாங்கமும், வெளிநாட்டவரும், ஸி. டபிள்யு. ஈ., மார்க்கெட்டிலாகா இவைதான் செய்கின்றனவென்றும், சாமான்கள் தட்டுப்பாடாயின் அவர்களைத்தான் கேட்கவேண்டுமென்றும் பதில் கொடுக்கின்றனர்.

அரசாங்கம் வர்த்தகரையும், வர்த்தகர் அரசாங்கத்தையும் குற்றம் சாட்டுகின்றார்கள். ஆனால் இடையிலே அவதிப்படுபவர் பொதுமக்களாகிய நாம்தான். இதற்கு விமோசனம் என்ன? மற்றவர்களை நம்பிப் பயனில்லை. நாமே தான இதற்கு வழிதேடிக் கொள்ளவேண்டும். வழிஎன்ன? நியாயமான விலைக்குக் கிடைத்தால் வாங்குவது. இல்லாவிட்டால் வாங்காமல் விடுவது. யார் நம்மைக் கட்டாயம்செய்ய முடியும்?

* * *

தமிழ்ப் பகுதிகளிலே, குறைந்தது 100க்கு 35 விகிதம் சிங்களம் தெரிந்த அதிகாரிகளை நியமிக்கவேண்டுமென்பது புதிய உத்தரவாம். ஆனால் சிங்களச் சிப்பந்திகளோ இப் பகுதிகளுக்குவர விரும்பவில்லை. இங்கு இருந்து வேலை செய்ய நிம்மதி இல்லைஎன்றும், பயமாக இருப்பதாயும், மொழிப்பிரச்னை இன்னும் சரிவரத் தீராதநிலைமையில், சிங்கள அதிகாரிகளைச் சிங்களப் பகுதியிலேயே வைத்து வேலைசெய்யும்படி கேட்க வேண்டுமென்றும், அரசாங்க குமாஸ்தாக்கள் சங்கத்தைச் சேர்ந்த சிங்களவர்களே அரசாங்கத்துக்குக் கடிதம்எழுதிக் கேட்டுக்கொண்டிருக்கிறார்களாம்!

இங்கு கல்விக் காரியாலயத்துக்கு அனுப்பப்பட்ட சிங்கள சிப்பந்திகள் சும்மா இருப்பதாயும், தமிழிலேயே ஆசிரியர்களிடமிருந்து கடிதம் வருவதால், சிங்கள சிப்பந்திகள் ஒன்றும் புரியாமல் ஒரு வேலையுமின்றி இருப்பதாயும், கல்வி உதவி டைரக்டர், மேலிடத்துக்கு எழுதியிருப்பதாக மற்றொரு செய்தி கூறுகிறது.

தனிச்சிங்களச் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவதால் ஏற்படும் பலன் இது. நிர்வாகச் செலவைக்குறைத்து சிக்கனம் செய்யவேண்டியிருக்க, வேலை செய்யாதவர்களுக்குக் கூலிகொடுத்து, செலவை ஒன்றுக்கு இரண்டாக்கியுள்ளனர்! அரசாங்க சிப்பந்திக்கு மூன்றுமொழிகளும் தெரிந்திருக்கவேண்டுமென்று ஓர் உத்தரவுபோட்டால் மொழித் தலையிடி எல்லாம் தீரும். செலவும் குறையும். ஆனால் இப்படிச் செய்யும் நல்லபுத்தி இந்த அரசாங்கத்துக்கு வருமா என்று கேட்கிறார் ஒரன்பர்

(8 ம் பக்கம் பார்க்க)

## கங்கை-சமுத்திர...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுவந்தது சோமாஸ்கந்த வடிவமேயாகும். திருக்கோணமலையில்வெளிப்பட்ட சோமாஸ் கந்தமூர்த்தி முன்னர் கோணேசர்மலைக் கோயிலில் இருந்தவையே. இவைபின்னர் தம்பலகாமம் கோயிலில் வைத்துப் பலகாலம் பூசிக்கப்பட்டு வந்தன. சிலபல வருடகாலத்தின் முன் திருக்கோணமலையில் நடந்த கலகத்தினல் குரோதமடைந்த புறமத கலககாரரில் ஒரு பகுதியினர் தம்பலகாமம் கோயிலில் இருந்த மூர்த்திசலைக்களவெடுத்து பின் திருகோணமலைக் கடற்கரையில் மறைத்து விட்டார்கள் அவைகளே இப்பொழுது சைவசமயிகள் செய்த தவப்பயனய் வெளிப்பட்டிருக்கின்றன.

தம்பலகாமம் கோயிலில் மூலமூர்த்தியாக வைத்துப் பூசிக்கப்பெற்றவையும் பழைய கோணேஸ்வரர் கோயிலுக்குரியவையுமான இவ்விக்கிரகங்கள் தம்பலகாமம் கோயிலிலிருந்து மறைந்தபின் புதிதாகச் செய்யப்பட்ட சோமாஸ் கந்தமூர்த்தியே சமீபகாலம்வரை தம்பலகாமம் கோயில் மூல மூர்த்தியாகப் பூசிக்கப்பட்டுவந்தது. சில வருடங்களுக்குமுன் அங்கு மூல மூர்த்தியாக சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பெற்றது.

எனவே மூன்று காரணங்களால் கோணேஸ்வரத்தில் சோமாஸ்கந்தமூர்த்தியே பிரதான மூர்த்தி என்பது தெளிவாகின்றது (1)கோயிலமைத்த திருவாரூர் அரசர்கட்கு குலதெய்வம் திருவாரூர் தியாகராசமூர்த்தியாக இருப்பது (2) பறங்கியர் கோயிலிடித்தபொழுது சோமாஸ்கந்தமூர்த்தியையே எடுத்துக்கொண்டு போய் கழனி மலையிலும் பின் செங்கடக நகரியிலும் பின் தம்பலகாமத்திலும் கோயில் கட்டிவைத்துப் பூசித்தது. (3) திருகோணமலைக்கோயிலை அனுசரித்துக் கட்டிய அதே முறையில் நித்திய நைமித்தியங்கள் நடந்து வருகிற தம்பலகாமம் கோயில் மூல மூர்த்திசோமாஸ் கந்தமூர்த்தியாகவே இருந்து வந்தமை

திருக்கோணமலையில்வெளிப்பட்ட சோமாஸ்கந்த மூர்த்தியோடு வெளிவந்து நின்ற திருக்கோலத்தேவி வடிவமொன்று சோமாஸ்கந்த மூர்த்தியின் வலது பறமுள்ள வீரசக்தியாகவுமகொள்ள இடமிருக்கிறது.

"சோமஸ்கந்தேஸ்வரம் புரோக்தம் போகசக்திந்து வாமகே வீரந்து தட்சிணே பார்சுவே ஆசநம் யோகசந்திகம் கார்த்திகேயந்து மத்யேது ஆசீனம் வாஸ்திதந்துவா பஞ்ச விம்சதி மூர்த்தினும் சோமஸ்கந்தம் விசேஷ என்னும் ஆகம சுலோகங்களே அதற்குப் பிரமாணமாகும் இங்ஙனம் வீரசக்தியோடும் சோமஸ்கந்த மூர்த்தி வடிவம் இருப்பது மிக்குறைவு. இது ஆகமபோத விஷயம் சில இடங்களில் இவ்விதம் இருக்கிறது.

மேலும் இத்தேவி வடிவம் முன்னேஸ்வரம் ஸ்ரீவடிவழகியம்பாளைப் போல் நவராத்திரி பூஜை காலங்களில் தனியாக கொலுவீற்றிருக்கவும் உற்சவம் நடாத்தவும் தகுதிவாய்ந்தது.

தற்போது மூலமூர்த்தியாக ஸ்தாபிக்க இருக்கும் கௌரி சங்கரலிங்கம் புண்ணிய பூமியாகிய வடஇந்தியாவில் புண்ணிய தீர்த்தத்தில் உற்பத்தியாகிய சுயம்பு பாணலிங்க மூர்த்தியாகும் எனவே இம் மூர்த்திகளெல்லாவற்றையும் தக்ஷிண கைலாசம் எனப்படும் திருகோணமலையில் 339 ஆண்டின் பின் மீண்டும் புதிதாக அமைக்கப்பெற்ற ஆலயத்தில் பிரதிஷ்டை செய்கின்ற அத்திருநாள் கிடைத்தற்கரிய பெருநாள் இலங்கையின் சரித்திரத்தில் பொன்னெழுத்தால் பொறிக்கப்படவேண்டிய நன்னாள் இன்னாளில் திருமலைக்குச் செல்ல வசதியுள்ள பக்தர்கள் அங்குசென்றும் அவ்வண்ணம் செல்ல இயலாதவர்கள் தத்தம் இடங்களில் இருந்துகொண்டே ஸ்ரீ மாதுமையம்பாள் சமேத கோணேசப் பெருமானை மன

முருகிப் பிரார்த்தித்தும் எத்தனையோ நூற்றுண்டு காலமாக இருந்த சைவமக்களுக்குக் கிடையாத வேறு எம்மனோருக்குக் கிடைக்கச்செய்த எம்பெருமான் திருக்கருணையை நினைந்து போற்றி மேன்மையோடு வாழ்வார்களாக.

## நடைபெற்றுலும் பிரயோச...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பயன் என்ன இருக்கமுடியும்.

**கேள்வி:** திரு ஜி. ஜி. பொன்னம்பலம், முற்றவெளிக் கூட்டத்தில் பேசியதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

**பதில்:** ஜி. ஜி. பொன்னம்பலம் முற்றவெளிக் கூட்டத்தில் பேசியதற்கும், அவர் பேசியதாக பத்திரிகையில் வெளிவந்ததற்கும் அதிக வித்தியாசமிருக்கிறது. ஆதலால் அதைப்பற்றி எப்படி அபிப்பிராயம் கூற முடியும்.

**கேள்வி:** தமிழரசுக்கட்சியின் உத்தேச நேரடி நடவடிக்கையைப்பற்றி தெரிவிப்பீர்களா? அதில் மலைநாட்டுத் தமிழர்களும் கலந்துகொள்வார்களா?

**பதில்:** இம்மாதம் 6-ம், 7-ம் திகதிகளில் வவனியாவில் கூடி இறுதிமுடிவு செய்யப்படும். நிர்வாகசபையில் மலைநாட்டுத் தமிழர்களும் அங்கத்தவர்களாக இருக்கிருர்கள். மலைநாட்டில் போராட்டம் நடததுவது பற்றி அவர்களின் அபிப்பிராயம் கேட்கப்படும்.

## துறைமுகத்தில் என்னை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாரணையுடன் ஆஜராஞர்கள். 3-வது எதிரியாகிய கோகிலாம்பாள் சார்பில் எவரு ஆஜிம்ராகவில்லை. கிளிநொச்சி இன்ஸ்பெக்டர் திரு. பொன்னுத்துரை வழக்கு நடத்தினர்.

### சலவைத்தொழிலாளி சாட்சியம்

உருத்திரபுரத்தைச் சேர்ந்த சலவைத் தொழிலாளி வேலன் செல்லன் சாட்சியமளித்தபோது கூறியதாவது:

காலஞ் சென்ற சர்மாவையும் மூன்று எதிரிகளையும் எனக்கு நன்ருகத் தெரியும். எல்லோரும் ஒரே வீட்டில்தான் இருப்பவர்கள். உருத்திரபுரம் பிள்ளையார் கோவிலில் காசிலிங்கசர்மாதான் பூசை செய்து வந்தார். நான அவருக்கு 9 வருடகாலமாக சலவை செய்துவந்தேன். ஒவ்வொரு கிடும்பத்திற்கும் ஒவ்வொரு "டோபி மார்க்" உண்டு. ஐயர் குடும்பத்திற்கு "சூலம்" டோபிமார்க்காக வைத்தேன். நான் 100 வீட்டிற்கு மேல் சலவை செய்கிறேன். பிள்ளையார் கோவில் ஐயரான படியால் 'சூலம்' குறிபோட்டேன்.

(கொலை சம்பந்தமாக கோட்டில் சமர்ப்பிக்கப்பட்ட தலையணை யுறைகளில் 'சூலம்' அடையாளத்தை அடையாளம் கண்டுபிடித்தார்) என்னிடம் 13 துணிகள் தரப்பட்டது. பொலிஸார் வந்து என்னிடமிருந்து 13 துணிகளையும் பாரமெடுத்தார்கள். முதலாம் இரண்டாம் எதிரிகளுக்கு நான் சலவை செய்வதில்லை.

### 6 போத்தல் கள்ளு வாங்கினுர்.

உருத்திரபுரம் சீவல் தொழிலாளி முத்து சோலையன் சாட்சியமளித்த போது கூறியதாவது:

சம்பவம் நடந்ததினத்தன்று 1-ம் 2-ம் எதிரிகள் 6 போத்தல் கள்ளு 3 ரூபாவிற்கு வாங்கினுர்கள். அதற்கு 2-வது எதிரியாகிய பசுபதி பணம் தந்தார்.

சாட்சியை இரண்டாவது எதிரியின் வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: 2-வது எதிரிமட்டும் தான் வந்து கள்ளு வாங்குபவரா?

சாட்சி: வேறு ஆட்களும் வாங்கிச் செல்கிறவர்கள்

வழ: 2-வது எதிரி எப்பொழுதும் வருவாரா?

சாட்சி: ஆம்

வழ: 2,3 போர்த்தல் குடிப்பாரா?

சாட்சி: இல்லை, 1 போத்தல் குடிப்பார்

வழ: கள்ளுக்கடையில் பேசுவதுபோல முணுமுணுக்க வேண்டாம். 1-வது எதிரி குடிக்கிறவரா?

சாட்சி: ஆம்

வழ: சம்பவம்பற்றி பொலிசுக்கு எப்பொழுது வாக்குமூலம் கொடுத்தீர்?

சாட்சி: பிரேதம் கண்டெடுத்து ஒரு கிழமைக்குப் பின்பு.

வழ: ஐயரின் வீட்டிற்கும் உமது வீட்டிற்கும் எவ்வளவு தூரம்?

சாட்சி: ஒரு மைல் தூரம்.

வழ: உமது வீட்டிலும் பார்க்க கோவிலுக்குக் கிட்ட வேறு கள்ளுக்கொட்டில்கள் உண்டா?

சாட்சி: ஆம்.

வழ: உமது கொட்டிலில் மலிவானபடியாலும், நல்ல கள்ளானபடியாலும் விற்பனை அதிகம்?

சாட்சி: ஆம்.

நெடுந்தீவு 2-ம் குறிச்சி விதானையார் திரு. நா. சந்திரா கணபதிப்பிள்ளை சாட்சியமளித்தபோது கூறியதாவது:

கடந்த வருடம் மார்கழி மாதம் 31-ந் திகதி குப்புசாமி ஐயர் வீட்டுக்குப் போனேன். முதலாவது எதிரியும் வேறு ஆட்களும் அங்கே இருந்தார்கள். முதலாவது எதிரி கோகிலாம்பாளைப் பார்க்க வீட்டிற்குள் போக முயன்றபோது தான் தடுத்ததாகவும், முதலாவது எதிரி தான் காசிலிங்கசர்மா காணமல் போனதற்கு காரணமென்றும் குப்புசாமி ஐயர் கூறினர். ஆஸ்பத்திரியில் முதலாவது எதிரியைக் கொண்டுபோய் குடித்திருக்கிருரா என்று சோதனை செய்தேன். அடுத்த நாள் ஊர்காவற்றுறை பொலிசில் பாரம் கொடுத்தேன்.

சாட்சியை முதலாவது எதிரியின் வழக்கறிஞர் திரு. ஏ. அமிர்தலிங்கம் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: பொலிஸ் வேலையை காரியாதிகாரியும் நீங்களும் தான் செய்வது?

சாட்சி: ஆம்.

வழ: காரியாதிகாரி தனியாக இருக்கிருரா?

சாட்சி: ஆம்.

வழ: நீர் கைது செய்தவரை காரியாதிகாரியிடம் பாரப்படுத்த வேண்டும்

சாட்சி: ஆம் அவர் சொன்னுல் பொலிஸில் பாரப்படுத்த வேண்டும்

வழ: மார்கழி 31-ந் திகதி முதலாவது எதிரியைக் கைது செய்தீர்?

சாட்சி ஆம்

வழ: என்ன குற்றச் சாட்டின் பேரில்?

சாட்சி: குப்புசாமி ஐயர் வீட்டில் அனுமதியின்றி உள்ளே போன்தால்!

வழ: குப்புசாமி ஐயரின் வாக்குமூலத்தை எப்போது பதிவு செய்தீர்?

சாட்சி: மார்கழி 31-ந் திகதி மாலை 4-30 மணிக்கு!

வழ: முதலாம் எதிரி கைது செய்யப்பட்ட பின்பா?

சாட்சி அதற்கு முன்பு

வழ: முதலாவது எதிரி எங்கு நின்ருர்?

சாட்சி: குப்புசாமி ஐயர் வீட்டு விருந்தையில் இருந்தார்

வழ: மற்ற ஆட்களுடன் கதைத்துக் கொண்டிருந்தாரா?

சாட்சி: ஆம்

வழ: முதலாவது எதிரியின் கூப்பனை 3-வது எதிரி கொண்டு வந்தது தெரியுமா?

சாட்சி: பின்பு தான் தெரியும்

வழ: 1-வது எதிரி தனது கூப்பனை எடுக்க அங்கு வந்திருக்கலாம்?

சாட்சி: எனக்குத் தெரியாது

வழ: 1-வது எதிரியை டாக்டரிடம் கொண்டு போனீர்?

சாட்சி: ஆம்

வழ: ஏன்?

சாட்சி: அவர் குடித்திருக்கிருரா என்று சோதனை செய்ய

வழ: நெடுந்தீவில் எல்லோரும் கள்ளுக்குடிப்பது வழக்கம்?

சாட்சி: ஆம்

வழ:1-வதுஎதிரிகளுஎதிராக வழக்குவைத்தீரா?

சாட்சி: இல்லை

வழ: முதலாவது எதிரியை ஏன் பொலிஸில் கொடுத்தீர்?

சாட்சி: காரியாதிகாரி இல்லாதபடியால்

வழ: காரியாதிகாரி எங்கே போனுர்!

சாட்சி: எனக்குத் தெரியாது

வழ: குப்புசாமி ஐயர் உங்கள் கோயிலுக்கும் பூசை செய்கிறவர்?

சாட்சி: ஆம்

வழ: முதலாம் எதிரியை உங்கள் வீட்டில் அடித்தீரா?

சாட்சி: இல்லை

காலஞ் சென்ற காசிலிங்க சர்மாவின் மனையும் 3-வது எதிரியுமான கோகிலாம்பாள் சாட்சியைக் குறுக்கு விசாரணை செய்தார்.

கோகிலாம்பாள்: வீட்டிலிருந்து நான் துறைமுகத்திற்கு வரும்போது என்னைச் சந்தித்தீரா?

விதானையார்: ஆம்

கோகிலா: அப்பொழுது வண்டியில் வந்தீரா?

விதானை: ஆம்

கோகிலா: என்னைக் கண்டதும் பேசினீர்?

விதானை: பேசவில்லை

கோகிலா: பிள்ளைகளை விட்டுவிட்டு போகும்படி கூறினீர்?

விதானை; இல்லை

கோகிலா: என்னைத் தனியே போகும்படி சொன்னீர்?

விதானை: சொல்லவில்லை.

நெடுந்தீவு விதானையார் விஸ்வலிங்கம் நடராசா சாட்சியமளித்தபோது கூறியதாவது:

முதலாவது எதிரி வேலுப்பிள்ளையைத் தேடிப்பார்த்தேன். கோகிலாம்பாள் குப்புசாமி ஐயருக்கு எழுதியபோஸ்கார்டை எடுத்து காரியாதிகாரிமூலம் கிளிநொச்சி பொலிஸாரிடம் சமர்ப்பித்தேன்.

1-வது எதிரியின் வழக்கறிஞர் திரு, ஏ அமிர்தலிங்கம் குறுக்குவிசாரணைசெய்தபோது மற்றவிதானையார் நெடுந்தீவு துறைமுகத்தில் 1-வது எதிரியைக் கொண்டுபோனபோது தான் கண்டதாகவும் மீண்டும் 1-து எதிரி நெடுந்தீவிற்கு வந்திருப்பாரென்று சந்தேகித்தபடியால்தேடியதாகவும் கூறினர்.

சுப்பிரமணிய ஐயர் மனைவி பரமேஸ்வரியம்மா சாட்சியமளித்தபோது கூறியதாவது:

கோகிலாம்பாளை எனக்குத் தெரியும். எங்களுக்குச் சொந்தமில்லை. காசிலிங்கசர்மாவும் சொந்தமில்லை.கோகிலாம்பாள் கடந்தவருடம் மார்கழி 16-ம் திகதி 4 பிள்ளைகளுடனும் எங்கள் வீட்டிற்கு வந்தார். 19-ந் திகதி மட்டும் அங்கே இருந்தார்கள். அதன் பின் உருத்திரபுரம் போய்விட்டார்கள்.

2வது எதிரியின் வழக்கறிஞர் திரு. டி. கணேசலிங்கம் குறுக்கு விசாரணை செய்தார்.

வழ: காசிலிங்கசர்மா உங்கள் வீட்டிற்கு முன்பு வருகிறவரா?

சாட்சி: ஆம்

வழ: அப்பொழுது அவருடன் கோகிலாம்பாளும் வருவார்?

சாட்சி: ஆம்.

வழ: மார்கழி 16-ம் திகதி 3-வது எதிரிவந்தபோது ஐயரைப்பற்றிக் கேட்டீரா?என்ன சொன்னர்?

சாட்சி: ஆம்! கணவனின் தகப்பனருக்குச் சுகமில்லாதபடியால் நெடுந்தீவுக்குப் போய்விட்டதாகச் சொன்னர்.

வழ: கோகிலாம்பாளுடன் முன்பு நாராயணசர்மா வருகிறவரா?

சாட்சி: இல்லை.

வழ: தைமாதம் 7-ம் திகதி நாராயணசர்மா கோகிலாம்பாளுடன் வந்தாரா!

சாட்சி: ஆம்.

வழ: அன்றிரவு இருவரும் உங்கள் வீட்டில்தான் தங்கினுர்களா?

சாட்சி: ஆம்.

வழ: காரில் வந்தவர்கள்?

சாட்சி: ஆம்.

வழ: கோகிலாம்பாள் முகத்தில் வித்தியாசம் காணப்படவில்லை?

சாட்சி: இல்லை.

கிளிநொச்சி பொலிஸ்கான்ஸ்டபிள்கள் குமாரசே, பியசேன, அரியரத்தினம், கந்தசாமி ஆகியோர் சாட்சியமளித்தார்கள். மேல்விசாரணை இம்மாதம் 17-ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

## மகாநாடு பயன...

1-ம் பக்கத் தொடர்ச்சி

கொண்டிருந்தார்கள். 1832-ம் ஆண்டு ஆங்கிலம் ஆட்சிமொழியான பின்பும் சிங்களமும் தமிழும் சரி சமனுக நாடு முழுவதும் பாவிக்கப்பட்டது. ராசக்கிரமபாகுவின் ஆட்சியின் காலத்திலும் எங்கள பகுதிக்கு தமிழ் அதிகாரி தான் அனுப்பிவைக்கப்படிருந்தார். கண்டியின்கடைசி மன்னன் விக்கிரமராசசிங்காவும்தமிழிலும்கையெழுத்திட்டுள்ளார். பிரதமர் சிறிமாவின் பாட்டனரும் தமிழில் தான் எல்லாத் தொடர்பும் வைத்திருந்தார்.

இத்துறைக்கு 2500 வருடங்களுக்கு முன் தொடங்கி இலங்கையில் சிங்களவர்களுக்கு தமிழர்கள் அடிமையாகவோ தமிழர்களுக்கு சிங்களவர் அடிமையாகவோ இந்த நாட்டில் வாழவில்லை. சிங்களவர்களும் தமிழர்களும் சரிநிகர் சமானமாகவே வாழ்ந்தார்கள். அந்நியரான ஒல்லாந்தார், டச்சுக்காரர், போத்துக்கேயர் ஆங்கிலேயர் ஆகியவர்களுக்கு கீழ் வாழ்ந்த நாட்களிலும், இலங்கை முழுவதும், தமிழுக்கும் சிங்களத்துக்கும் சம அந்தஸ்து கொடுக்கப்பட்டுவந்தது. ஒரு காலமாவது சிங்களத்திற்கு உயர்ந்த அந்தஸ்தும் தமிழுக்கு தாழ்ந்த அந்தஸ்தும் கொடுக்கப்படவில்லை.

இலங்கையில் சிறு சிறுராஜ்யங்களாக தமிழர்களும் சிங்களவர்களும் ஆட்சிபுரிந்தனர். களே தவிர இலங்கை முழுவதையும் சிங்களத்தில் மட்டும் எவரும் ஆட்சி புரியவில்லை. 1956-ம் ஆண்டுக்குப் பின்னர் தான் இப்படியான ஒருஅவல நிலை தமிழர்களுக்கு ஏற்பட்டது. அந்நியரான ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆட்சியின்போது கூட தமிழ்மக்கள் தங்கள் மொழியைச் சுதந்திரமாகப் பாவித்தார்கள். பெட்டிசங்கள் உறுதிகள், வழக்குவிசாரணைகள், கல்விவசதிகள் எல்லாம் தமிழில் செய்து கொள்ள முடிந்தது. ஆனல் 1956-ம் ஆண்டுக்குப்பின் சிங்கள அரசாங்கத்தின் கீழ்கொஞ்சம் கொஞ்சமாக நமது உரிமைகளை இழந்துவருகிறோம்.

### மகாநாடுக்குப் போகக்கூடாது

அந்நியர் ஆட்சிக்குமுன் நாங்கள் எப்படித் தன்மானத்துடன் வாழ்ந்தோமோ அப்படிப்பட்ட நிலைவந்தால் தான தமிழர்கள் இலங்கையில் சுதந்திரமாக வாழ முடியும். திட்டமிட்டு எங்களை கொஞ்சம் கொஞ்சமாக நசுக்கிவரும் சிங்கள அரசாங்கத்துடனே, சிங்கள மக்களுடனே எந்தத் தமிழ்த் தலைவனும் வட்டமேசை மகாநாட்டில் சந்திக்க முன்வரக்கூடாது: இவ்வளவு காலமும் சிங்களத் தலைவர்களை நம்பி ஏமாந்தது போதும். இனிமேலும் ஏமாரத் தயாராய் இல்லை. தமிழர்கள் வருங்காலத்தில் சிங்களத் தலைவர்களை நம்பிஒரு விதபயனும் ஏற்படப்போவதில்லை.

# "நல்லொழுக்கம் இல்லாத கல்வி சோபிக்காது"

## மாணவர் மத்தியில் துரைசாமிசாஸ்திரிகள்

யாழ்ப்பாணம், வியாழன்
"மாணவர்கள் நற்பண்புகளைப் பயின்று அவற்றைத் தமதாக்கிக்கொள்ள வேண்டும். பள்ளிப்பருவத்தில் மாணவர்கள் ஆற்றல்கள் முழுவதையும் ஒரு முகமாகத் திரட்டிக்கொள்ள வேண்டும். அரசியல் சேற்றில் சிக்கிக்கொள்ளாது தன்னடகத்துடன் தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும்" என்று பேராசிரியர் திரு. எஸ். ஆர். துரைசாமி சாஸ்திரிகள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி உயர் வகுப்பு மாணவர் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

செல்வன் பாலகிருஷ்ணன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார். பேராசிரியர் திரு. துரைசாமி சாஸ்திரியார் மேலும் கூறியதாவது:

விஞ்ஞான அறிவைப் பெருக்கத் தம்மனத்தை விஸ்தரிப்பதோடு மக்களிடையே அன்பைப் பெருக்க உள்ளத்தைப் பரந்ததாக வைத்துக்கொள்ள வேண்டும். எந்த நிலையிலும் தோல்வி மனப்பான்மை அடையக் கூடாது. எவ்வளவு ஆக்க சக்திகளை ஒருவன் பெற்றிருந்தாலும் எல்லாவற்றுக்கும் மேலாக உள்ள பரம் பொருளையும் மறந்துவிடலாகாது.

ஆளுமை என்பது ஒருவனிடத்திலுள்ள நற்குணங்களின் ஆக்கப்பாடான பிரதிபலிப்பேயாகும். ஒரு நாட்டுக்கு முக்கியமான ஆக்கம் அளிப்பவர் மூவகையினர். முக்காலங்களிலும் உள்ளுணர்வு வாய்க்கப்பெற்ற ஞானி, விஷயங்களை ஊன்றி உணரும் ஆற்றல் வாய்ந்த பேராசிரியன் தீர்க்கதரிசியான ஒரு அரசியல்வாதி என்பவர்களே அவர்கள்.

அரசியல்வாதி ஒரு தாயானவன். தன் குழந்தையைச் சீராட்டி அதனுடைய தேவைகளை அவ்வப்போதுணர்ந்து அதற்கு வேண்டியனவற்றைச் செய்வது போல் மக்களின் தேவையை அறிந்து வேண்டியவற்றைச் செய்பவன். இன்று இத்தகைய அரசியல்வாதிகள் இல்லாமையினால் தான் உலகு அல்லற்படுகிறது.

ஆண்டவன் எல்லோருக்கும் எல்லாவிதமான வசதிகளையும் அளித்திருக்கிறன். எந்த மனிதனுக்கும் வாழ்வதென்பது ஒரு பிரச்னையல்ல. அவர்கள் பஞ்சசீலத்தின் அடிப்படையில் வாழ்விலே கிடைக்கின்ற எல்லாச் சந்தர்ப்பங்களையும் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஆனல் சந்தர்ப்ப வாதிகளாக மட்டும் மாறக்கூடாது.

மாணவர்கள் கல்வி கற்றுப் பட்டம் பெற்றதுடன் அது முடிவடையவில்லை. பட்டம் பெறுவது வாழ்க்கைக்கு உதவக்கூடியதாகவும், மேலும் மேலும் தொழிற் கல்வியின் அபிவிருத்திக்குரியதாயும் அமையவேண்டும். மாணவர்கள் தாம் கற்கும் கல்வியினால் ஆக்கம் பெற முயலவேண்டும்.

இன்று மனிதன் தான் வாழும் சமுதாயத்தில் ஒரு தனி அம்சமாக விளங்குகின்றன். சூழல் போன்ற எத்தனையோ சிக்கல்கள் அவனைச் சூழ்ந்துள்ளன. அவற்றுள் அவன் சிக்காது தன் ஆளுமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். தன்னுடைய நற்குணங்களையும் நல்லொழுக்கத்தையும் பாதுகாத்துக்கொள்ளவேண்டும். எந்த வகையான நிலை ஏற்படினும் தன்னுடைய தனிமை கெடாதவகை அமைத்துக்கொள்ளுந் திறவு பெற்றிருத்தல் வேண்டும். மனித தன்மையை கெடுத்துக்கொள்ளக்கூடாது.

மாணவர்களது ஆறும் வயது முதல் இருபதாம் வயது வரை உள்ள பருவம் மிகச் சிக்கலானது. ஆவல், அக்கறையப்பு என்பவற்றோடு கூடியது. இப்பருவத்தில் தான் கல்வியை நெறிப்படுத்திக கற்க வேண்டும். மாணவர் வாழ்வில் கட்டுப்பாடு நற்பயனளிக்கும். இதற்கு கலாசாலையே நற் பயிற்சிக்களம்.

கல்வியின் இலட்சியமாகிய நல்லொழுக்கம் இல்லையெனில் கல்வி சோபிக்காது. ஒரு கலாசாலை சிறு உலகம் போன்றது. அங்கு பல வகைப்பட்ட மாணவர்களோடு பழகக் கற்றுக்கொள்ளும் ஒரு மாணவன் அதன் மூலம் கூட்டுறவு வாழ்க்கை கூட்டுணவு என்பனவற்றைப் பெற்றுக்கொள்வதுடன் பரந்த உலகில் பல்ருடன் பழகவும் அனுபவம் பெறுகின்றன்.

---

## திருமலைச் செய்திகள்

### மரணதண்டனை

திருக்கோணமலை, புதன்
கல்முனையைச்சேர்ந்த சிவசிதம்பரம் அல்லது சின்னையா என்பவரைக் கத்தியால் குத்திக் கொலை செய்ததாக பசுபதி ஞானப்பிரகாசம் என்ற 25 வயது இளைஞர் மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு அசைஸ் நீதிமன்றத்தில நீதியரசர் திரு. எச். டபிள்யு. தம்பையா கியு. ஸி. முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. ஜூரிகள் எதிரி குற்றவாளியென ஏகமனதாக தெரிவிக்கவே நீதியரசர் எதிரிக்கு மரணதண்டனை விதித்து தீர்ப்பளித்தார். எதிரியின் சார்பில் வழக்கறிஞர் செரூபிம் வழக்கறிஞர் சபுதீன் அனுசரணையுடன் ஆஜரானர்.

∴ ∴ ∴

### சிறுவர் பூங்காவில் பெரியவர்கள்!

திருக்கோணமலை சுற்றுமதில் விளையாட்டரங்கத்திற்கு முன்னுலுள்ள சிறுவர்களுக்கான மைதானத்தில் 12 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் விளையாடவென ஊஞ்சல்கள், மற்றும் விளையாட்டுச் சாதனங்களான சறுக்கு வண்டிகள், முதலியன அமைக்கப்பட்டுள்ளன. இவ்வூஞ்சல்களில் சிறுவர்கள் விளையாடுவதைக் காண்பது அரிது. மாலையில் கடற்கரைக்கு உல்லாசமாகத் தங்கள் துணைவிகளுடன் செல்லும் உத்தியோகஸ்தர்கள், இரவு 8 மணிவரை ஊஞ்சல் சறுக்கு வண்டிகள முதலியவற்றைப் பயன்படுத்துவதை சர்வசாதாரணமாகக் காணலாம். இதனுல் திருக்கோணமலை நகரசபை சிறுவர் பூங்காவைச் சுற்றி வேலி அமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரிகிறது.

∴ ∴ ∴

### தாய்மார் கஷ்டம்

மூதூரில் பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவில் கட்டப்பட்ட பிரசவவிடுதி திறக்கப்படாதிருப்பதால் மூதூர் வைத்தியசாலையில் தற்போதுள்ள சிறுகட்டிடத்தில் மட்டுமே பிரசவ தாய்மார்கள் அனுமதிக்கப்படுகிருர்கள். இதனுல் பிரசவத் தாய்மார்கள் பெரும் கஷ்டமடைகின்றனர்.

∴ ∴ ∴

### தையல் பாடசாலை

கந்தளாய்க்கு அண்மையிலுள்ள 95-ம் கட்டைக் குடியேற்றத்தில் உள்ள மாதர் முன்னேற்றச் சங்க ஆதரவில் தையல் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இத்தையல் பாடசாலைக்கு செல்வி டபிள்யூ குணவதி ஆசிரியை யாக நியமிக்கப்பட்டுள்ளார்.

---

# 12 வருடசிறை

## அக்கரைப்பற்று கொலை வழக்கில் தீர்ப்பு

திருக்கோணமலை, புதன்
அக்கரைப்பற்று வாசியான மீராலெவ்வை ஆதம்லெவ்வையை சுட்டுக் கொன்றதாக அவரது சகோதரர் மீராலெவ்வை அகமதுலெவ்வை என்பவர்மீது குற்றஞ்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் எச். டபிள்யு. தம்பையா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபொழுது எதிரிசாட்சியமளித்தார். எதிரி தனது சாட்சியத்தில் கூறியதாவது:

"சம்பவம் நடந்த தினம் ஆதம்லெவ்வையும் அசனர் லெவ்வையும் என்னைத் தடியால் தாக்கினர். அப்பொழுது என்கையில் துவக்கு இருந்தது. அப்பொழுது எங்கள் மூவருக்கும் ஏற்பட்ட கைகலப்பில் ஏற்கெனவே தோட்டாவுடன் இருக்க துவக்கு அசனர்லெவ்வையின் கைக்கு மாறியது. அசனர்லெவ்வைதான் ஆதம்லெவ்வையைச் சுட்டார். "ஆதம்லெவ்வையைச் சுட்டுப் போட்டான் அசனர்" என நான் கத்தினேன்.

எதிரிதரப்பு வழக்கறிஞர்: உம்மிடமிருந்த இருதோட்டாவினுல் ஒன்றைக் கொண்டு ஆதம்லெவ்வையைச் சுட்டதாக முடிக்குரிய வழக்கறிஞர் கூறுகின்றர். நீர் நினைத்திருந்தால் மற்றத் தோட்டாவினுல் அசனர்லெவ்வையையும் சுட்டிருக்கலாமல்லவா?

எதிரி: நான் சுடநினைத்திருந்தால் அசனர் லெவ்வையைத் தான் சுட்டிருப்பேன். ஆதம் லெவ்வையைச் சுடவேண்டிய தேவையில்லை.

(கோர்ட்டில் சிரிப்பு)

விசாரணை முடிவில் எதிரிக்கு 12 வருட சடுழியச்சிறை விதிக்கப்பட்டது.

எதிரிதரப்பில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட வழக்கறிஞர் எம். கே. செல்வராசா ஆஜரானர். முடிக்குரிய தரப்பில் திரு. எம். பி. வீரசிங்கா ஆஜரானர்.

---

# மத்தியமாகாண சைவமகாசபை

## புதுவருட நிர்வாகிகள்

கண்டி, செவ்வாய்
மத்திய மாகாண சைவமகாசபையின் 37 வது ஆண்டு நிறைவுவிழா சென்ற சனிக்கிழமை நடைபெற்றது.

சுவாமிசச்சிதானந்தா மக்கள் சமயவளர்ச்சிக்கு ஆற்றவேண்டிய கடமை பற்றி சொற்பொழிவாற்றினர். சபையின் ஞாயிறு சமயபாட வகுப்பு மாணவ மாணவிகளால் பேச்சுகளும் தேவார இசையும் செல்விகள் காந்தி அண்ணமலை, சிவாந்தி சிவஞானத்தின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் இடம் பெற்றன.

பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்: சுவாமி சச்சிதானந்தா, திரு. ரி. வி. இராமகிருஷ்ணராவ், இராசவாசல் முதலியார் என். கனகநாயகம். இராசவாசல் முதலியார் கே. வி. இரங்கநாதன், திரு. எஸ். பி. வைத்திலிங்கம், திரு. பி பாலசிங்கம். தலைவர்: கலாநிதி சு. வித்தியானந்தன். உபதலைவர்கள்: திருவாளர்கள். கே. எம். தியாகராசா, ம. ஆனந்தன், மா. கனகராசா, வி. ரி. செல்லத்துரை, எஸ். துரைசாமி. இணைச்செயலாளர்கள்: திருவாளர்கள். சி. செ. இலங்கையர், மு. சச்சிதானந்தம். தனாதிகாரி: திரு. எம். சதாசிவமூர்த்தி. கட்டிடத்தலைவர்: பி சண்முகம். சமுதாயக்குருத்தலைவர்: திரு. கே. எம். சிவஞானம். கல்விக்கழகக் காரியதர்சி: திரு. கே. கே. மதியாபரணம். குருபூசைக்காரியதரிசி: திரு. எஸ். இராசநாயகம். பத்திராதிபர்: எஸ். மகாலிங்கம். நிர்வாகக்குழு: திருவாளர்கள்: கே. செல்வமுத்து, எஸ். சிவசுப்பிரமணியம், ஆர். எம். நாகலிங்கம், கே. தியாகராசா, எஸ். கிருஷ்ணபிள்ளை, ஐ. கணேசன், எஸ். சிவபாதம், வி. திருநாவுக்கரசு, எஸ். இராமனுஜம், என். பாலேந்திரா, பி. சிவஞானன், எஸ். சிவசுப்பிரமணியம்.

---

தமிழர்

# தமிழரசுக்கட்சியில் நம்பிக்கை இழந்துவிட்டனராம்

## மந்திரி இலங்கரத்ன கூறுகிறர்

உடுதேனியா, புதன்
'வடபகுதியில் எப்பொழுதாவது ஏழைமக்களுக்கு ஏதேனும் உதவிசெய்ய அரசாங்கம் முற்படும்போது தமிழரசுக்கட்சியினர் எதிர்க்கின்றனர். இதனுல் வடபகுதியிலுள்ள தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியில் நம்பிக்கை இழந்துவிட்டனர்' என உணவு வர்த்தக கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி. பி. இலங்கரத்ன இங்குள்ள கூட்டுறவு அரிசி ஆலையைத் திறந்துவைத்துப் பேசுகையில் கூறினர்.

மந்திரி இலங்கரத்ன மேலும் பேசுகையில் கூறியதாவது:

நான் சமீபத்தில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்தபோது இவ்வித நிலையை உணர முடிந்தது.

### நிபந்தனை

வடபகுதியிலுள்ள தமிழ் மக்கள், தமிழரசுக்கட்சியை ஒழித்துக்கட்டினலன்றி வடபகுதியில் மக்கள் வங்கிக் கிளைகளைத் திறக்க நான் உதவமாட்டேன்.

தமிழரசுக்கட்சியினர் இந்த நாட்டைப் பிளவபடுத்தும் முயற்சியில் என்றுமே வெற்றி பெறமாட்டார்கள். நான் உயிருடன் இருக்கும்வரையில் நாடு இரண்டாகப்பிரிவதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டேன்.

அரசாங்கம் சிறுபான்மையரின் நலன்களைப் பாதுகாத்து வந்துள்ளது. தமிழரசுக்கட்சி தமிழர்களைப் தவருன வழியில் இழுத்துச்சென்றுள்ளது

முதலில் தமிழரசுத் தலைவர்கள் தமது பிள்ளைகளுக்கு சிங்களம் போதிக்க மறுத்தார்கள். ஆனல் இப்பொழுது அவர்கள் இரகசியமாக சிங்களத்தைப் போதித்து வருகிறர்கள்.

---

# செய்தித் திரட்டு

### உத்தியோகம்

கொழும்பு, புதன்
ஸ்தலஸ்தாபன சபைகளுக்கு உத்தியோகத்தர்களை நியமிக்கும்போது தொழில் இணைப்புக் கந்தோர்கள் மூலம் எடுக்கும்படி ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனர் திரு. டபிள்யு டி. வி. மகாதந்திலா தெரிவித்துள்ளார்.

∴ ∴ ∴

### டாலர் நோட்டு

தெரணியகலை, செவ்
இங்குள்ள ஒருபேக்கரியில் 'கெயர்' மாவுமூடை பிரிக்கப்பட்டபோது அதனுள் பல அமெரிக்க டாலர் நோட்டுகள் இருக்கக் காணப்பட்டதாம்.

∴ ∴ ∴

### வேலை இழந்தனர்

கொழும்பு, புதன்
ஒழுங்கீனம் காரணமாக சென்ற வருடத்தில் 15 சப்-போஸ்ட்மாஸ்டர்கள் வேலை இழந்தனர்.

∴ ∴ ∴

தெகிவளை, செவ்.
புதுவருட சம்பள முன்பணம் கொடுக்கப்படாததற்காக தெகிவளை-கல்கிசை முனிசிப்பல் சபையில் சேர்ந்த 600 கனிஷ்ட ஊழியர்கள் வேலை நிறுத்தம் செய்தனர்.

∴ ∴ ∴

### யு. என். பி.யின் பலம்

முன்னெப்பொழுதுமே யில்லாதவகையில் ஐக்கியதேசியக் கட்சி பலம் பெற்றுள்ளதென்று லங்கா சமசமாஜக்கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா பத்தரமுல்லையில் சமசமாஜ வாலிப முன்னணிக் கூட்டமொன்றில் பேசுகையில் கூறினர். இடதுசாரிகள் ஐக்கியப்படாவிட்டால் யு. என். பி. மீண்டும் பதவிக்கு வந்துவிடுமென அவர்எச்சரித்தார்.

∴ ∴ ∴

### எளிமையானவர்

நாவலப்பிட்டி, புதன்
பாராளுமன்றத்தில் உள்ளவர்களில் மிகவும் எளிமையானவன் நானே என்று சபாநாயகர் திரு. ஆர். எஸ். பெல்பொல நாவலப்பிட்டி கனுருத கல்லூரியில் புதிய கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டிப் பேசுகையில் கூறினர்.

∴ ∴ ∴

### எதிர்காலத்திட்டம்

கொழும்பு, புதன்
இருபது வருடங்களாக நிரந்தரக் காரியதரிசிபதவிவகித்து வந்த திரு. ஆழ்வாப்பிள்ளை தமது பொறுப்புகளை திரு. ஜி. ஆர். டபிள்யு. டி. சில்வாவிடம் ஒப்படைத்தார். அவர் தமது எதிர்காலத்தில் கலாசாரசமயத் துறைகளில் ஈடுபாடுகொள்ள விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

∴ ∴ ∴

### மாதிரிப்பண்ணை

தண்ணீரூற்று, புதன்
தண்ணீரூற்றில் 75 ஏக்கர் விஸ்தீரணத்தில் படித்தவாலிபர்களுக்கென மாதிரிப்பண்ணையொன்று நிறுவப்படவிருப்பதாகக் கரைத்துறை காரியாதிகாரி தெரிவித்துள்ளார்.

∴ ∴ ∴

### பெயர்ப்பட்டியல்

மட்டக்களப்பு, புதன்
பலாலி ஆசிரியபயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெறுவதற்கு கிழக்கு மாகாண மாணவர்களின் பெயர்ப்பட்டியல் இரண்டாவது தடவையாக தயாரிக்கப்பட்டு வருவதாக மட்டு நகர் முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரை கூறியிருக்கிருர்.

∴ ∴ ∴

### இடமாற்றம்?

கொழும்பு. புதன்
இலங்கை ரோயல் விமானப் படை தலைமைக் காரியாலயத்தைக் கட்டுநாயக்காவிலிருந்து சீனன்வாடிக்கு இடமாற்றம் செய்வதுபற்றி அரசாங்கம் ஆராய்ந்துவருகிறது. ஆகாயப் படை பயிற்சி நிலையத்தை இவ்வருட முடிவுக்குள் சீனன் வாடிக்கு மாற்ற ஏற்கெனவே முடிவு செய்யப்பட்டுவிட்டது.

∴ ∴ ∴

### கூடைப்பந்தாட்டம்

மட்டக்களப்பு, புதன்
அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையேயான கூடைப்பந்தாட்டப்போட்டி மட்டக்களப்பில் முதன்முறையாக நடத்தப்படவிருக்கிறது. இம் மாதம் 6-ம் திகதி முதல் 8-ம் திகதிவரை அரச மைக்கேல் கல்லூரி மைதானத்தில் இப்போட்டி நடை பெறவிருக்கிறது.

# 'ஆசிரியர்-பெற்ரோர் உறவு வளரவேண்டும்'

## மாநகரசபை அங்கத்தவர் உரை

யாழ்ப்பாணம், செவ்வாய்

"பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்களின் பங்கிலும் பார்க்கப் பெற்ருர்களின் பங்குதான் அதிகம் வேண்டியுள்ளதென்றும், இவ்வாருன பெற்ருர் ஆசிரிய சங்கங்களை ஸ்தாபித்து நடத்துவதன்மூலம் பாடசாலையின் குறை நிறைகளைப் பெற்ரோர் அறிந்து கொள்ளவும்; ஆசிரியர்களுக்கும் பெற்ரோர்களுக்கும் பரஸ்பர நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் உண்டாக்கி பாடசாலையின் முன்னேற்றத்திற்கு உறுதுணை புரியும் என்றும் யாழ்ப்பாணம் வண்ணர்பண்ணை முஸ்லிம் தமிழ்க் கலவன் பாடசாலை (மனப உல் உறூம் மதுறஸா) மண்டபத்தில் நடைபெற்ற பெற்ருர் ஆசிரிய சங்க அங்குரார்ப்பணக் கூட்டத்திற்குத் தலைமை வகித்துப் பேசிய யாழ்ப்பாண மாநகரசபை அங்கத்தரான ஜனுப் காதிளம். எம். சுல்தான் கூறினர்.

உதவி வித்தியாதிபதி திரு. எஸ். யு. சோமசேகரம் பேசுகையில், பாடசாலையின் முன்னேற்றத்திற்குத் தம்மாலான உதவிகள் செய்வதாகவும் அரசாங்கத்தோடு எல்லோரையும் ஒத்துழைக்கும்படியும் கூறினர். பாடசாலைத் தலைமையாசிரியர் ஹாஜி வி. எம். எம். அபுசாலி உஸ்மானியா கல்லூரி அதிபர் ஜனுப் சி. எம். ஏ. ஜிப்ரி, ஜனப எம். எஸ். சாகிப் ஆகியோரும் பெற்ரோர் ஆசிரிய சங்க அவசியம்பற்றி உரை நிகழ்த்தினர்கள்.

கூட்டத்தில் உத்தியோகத்தர் தெரிவும்நடைபெற்றது. போஷகர்களாக காதி எம். எம். சுல்தான், உதவி வித்தியாதிபதி எஸ். யு. சோமசேகரம், அல்பிறட் துரையப்பா எம். பி., ஹாஜி வி. எம். எம். எஸ். அப்துல் காதர், என். எம். கௌது, எம். ஓ. எம். எல். அப்துல் காதர், கே. என். எம். மீரான் சாகிபு, எஸ். எம். மீரான் சாகிபு, எஸ். எம். யூசுப், ஹாஜி வி. எம். எம். அபுசாலிஹ்: கே. எம். எம். யூசுப், ஹாஜி என். பி. சுல்தான் முகிதீன் ஆகியோர் தெரிவுசெய்யபபட்டனர்.

தலைவராக பாடசாலைத் தலைமையாசிரியர் ஜனுப் எம். எச். எம். அப்துல் றஸாக்கும், உபதலைவர்களாக ஹாஜி எம். எஸ். மிஸ்கின் சாகிபு, அப்துல் காதரும், இணைக்காரியதரிசிகளாக ஜனுப கா. மீரான் முகிதீன், திரு. இ மசெல்வராசா ஆகியோரும், தனுதிகாரியாக ஜனுப் முகிதீன், எம். ஏ. சி. எம். ஹைலித்தும் தெரிவுசெய்யப்பட்டனர். நிருவாக சபை அங்கத்தவர்களாக திரு. மு சுப்பிரமணியம், ஜனுப்கள்: மு. இபுருகிம், ஹாஜி இ. மீராசாகிபு, எஸ். எம். இஸ்மாயில், எஸ். எம். அப்துல் கமீது, ஏ. எம். எஸ். முகிதீன், பி. எம். யூசுப் சாய்பு, உ. மு. அப்துல் மஜீத் ஆகியோரும், கணக்குப் பரிசோதகராக ஜனுப். எஸ். எம். சாகுல் கமீத்தும் ஏகமனதாக தெரிவுசெய்யப்பட்டனர். ஈற்றில் ஸலவாத்துடன் கூட்டம் முடிவடைந்தது.

---

## ராமநாம சங்கீர்த்தனம்

யாழ்ப்பரணம், செவ்வாய்

ஸ்ரீ ராம நவமியை முன்னிட்டு நேற்று மாலை 7 மணி முதல் 8 மணிவரை பெருமாள் கோவிலில் திவ்விய ஜீவன சங்கத்தின் சார்பாக ராமநாம சங்கீர்த்தனம் நடைபெற்றது.

## 'மக்கள் முன்னேறிவிட்டனர்'

கல்முனை, செவ்வாய்

"சுயேச்சை அபேட்சகர்களை பாராளுமன்றத்திற்கு அனுப்புவது பயனற்றதென்பதை நகது மக்கள் உணருவதற்குப் பதினைந்து வருடங்கள் பிடித்தது. பின்னுக்கு இருந்துகொண்டு ஒரு கட்சி அதிகாரத்துக்கு வருவதை ஆசீர்வதிப்பதில் யாதொரு பயனுமில்லை. தகுதியான ஒரு அரசியல் கட்சியை அதிகாரத்திற்குக் கொண்டுவர மக்கள் தீர்மானிக்கும் போது, அவர்கள் அக்கட்சியைப் பதவிக்குக் கொண்டுவர எல்லாவித உதவிகளும் செய்ய வேண்டும்' என்று முன்னை நாள் நிதி மந்திரி திரு. எம். எம். முஸதபா, கல்முனை நகர மண்டபத்தில், ஐக்கியதேசியக் கட்சித் தலைவர்களாகிய திரு. டட்லி சேனநாயக்காவையும், திரு. ஜெயவர்த்தனவையும் கௌரவிக்கும் முகமாக நடைபெற்ற கூட்டத்தின் போது பேசினர்.

நகர மண்டபத்தின் உள்ளேயும் வெளியேயும் ஏராளமான மக்கள் திரண்டிருந்தனர்.

திரு. டட்லி சேனநாயக்காவைபபற்றிபேசும்போது ஜனுப முஸ்தபா, அவர் ஜனநாயகத்தில் முழு நம்பிக்கையுடையவர் என்று தெரிவித்தார்.

ஜனுப் முஸ்தபா தொடர்ந்து கூறியதாவது:–

இன்று இலங்கை முன்னேற வேண்டுமானல் அதற்கு ஒரு வழியும், செயலும், காரணமும இருக்கவேண்டும். கிராமத்தில வாழும் மக்கள்கூட இன்று வரவு செலவுத் திட்டத்தைப் பற்றி நன்கு அறிந்துள்ளார்கள். ஒரு ரூபாவின் மதிப்புக் குறைந்துகொண்டு வருவதையும் அவர்கள் அறிந்துகொண்டார்கள்.

பெரிய இடங்களிலும், லஞ்சமும், ஊழல்களும் மலிந்துளளதோடு, தனிச் சலுகையும், தனிப்பற்றும், தேசிய நிலைக்கு வந்துள்ளது. குறைந்த அளவு உறுப்பினர் காரணமாக பாராளுமன்றம் ஒத்திப்போடப்பட வேண்டிய நிலைமை இலங்கை அரசியலில் ஏற்பட்டுள்ளது. இவையெல்லாம் இன்றுள்ள அவல நிலையை எடுத்துக்காட்டுகிறது.

திருவாளர்கள் டலலி சேனநாயக்கா, ஜே. ஆர். ஜெயவர்த்தன, ஆர் குணதிலகா, கே. கே. குழந்தி மரக்காயர் ஆகியோரும் பேசினர்கள்.

பட்டினசபை அங்கத்தவர் திரு. எம். தம்பிப்பிள்ளை, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களை வரவேற்ருர்.

---

## பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி

வவனியா, புதன்

வவனியா, மன்னர் மத்திய மகா, மகா வித்தியாலயங்களினதும், ஆங்கிலப் பாடசாலைகளினதும் விளையாட்டுப் போட்டியும், தேகப்பயிற்சிப் போட்டியும் வியாழன், வெள்ளி, சனி ஆகிய மூன்று நாட்களிலும் வவனியா தமிழ் மகா வித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறவிருக்கின்றன. அன்றைய போட்டிகளுக்குத் திரு. பி. ஏச். பிரேமவாதன, பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

வெற்றி பெறுபவர்களுக்குத் திருமதி பிரேமவாதன பரிசல்களை வழங்குவார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

### வியாழன் 4-4-63

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6–55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 தேர்ந்த ஆசை, 7–45 திரை இசை, 8–15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5–15 இளைஞர் மன்றம், 5–45 திரை இசை, 6–15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக்கோஷ்டி.

இரவு 7–00 டாக்டர் ஏ. சதாசிவம் — பேச்சு, 7–15 நேயர்விரும்பம், 7-45 'மனோரஞ்சிதம்' — தொடர்நாடகம், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9–15 கவிக்கோவில், 9-30 குரல் வகை, 10-00 தமிழோசை (பி. பி. ஸி. அஞ்சல்).

### திருச்சி

(செய்திகள்: காலை 7–15, பகல் 3-00, இரவு 7-15)

காலை 6-45 மங்கள இசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 அருள்வாக்கு, 7-05 வாத்திய இசை, 7-10 நிகழ்ச்சிக்குறிப்புகள், 7-30 செய்திக்குறிப்புகள், 7-35 மதுரை வி. ஏ. மீனுக்ஷி — பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 1-00 மதுரை வி. ஏ. மீனுக்ஷி — பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரலிசை, 2-10 தொழிலைத் தேர்ந்தெடுக்க — மரணவர்களுக்கு வேலை வாய்ப்புகள்.

மாலை 4–45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-45 வாத்திய இசை, 6-20 கிராமநிகழ்ச்சிகள்.

இரவு 7–30 இம்மாதப் பாடல், 7-35 வி. சத்திய மூர்த்தி — பேச்சு, 7–45 ராகம், தானம், பல்லவி செம்பை வைத்தியநாத பாகவதர் — பாட்டு, 8-40 திரைப்படஇசை, 9-15 வீரபாரதம் — இசைச் சித்திரம்.

## ஆனந்தனுக்கு வரவேற்பு

மாதகல், புதன்

அண்மையில் நடைபெற்ற மாதகல் சென். தோமஸ் சனசமூக நிலையத்தின் விசேட பொதுக் கூட்டத்தில் ஆழ்கடலை நீந்திக் கடந்த வீரன் ஆனந்தனுக்கு ஓர் வரவேற்பு நடத்தவேண்டுமென்று ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

## உதைபந்தாட்டச் சங்க நிர்வாகிகள்

வவனியா, செவ்வாய்

வவனியா உதைபந்தாட்டச் சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணியளவில் திரு கே. சி. ராஜசிங்கம்தலைமையில் வவனியா விளையாட்டுக் கழகத்தில் நடைபெற்றது. அத்தருணம் இவ்வருட உத்தியோகஸதர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்கள்: திரு. பி. ஏச். பிரேமவாடின (அரசாங்க அதிபர்), திரு. சிவசிதம்பரம், திரு. ஆர். அம்பலவாணர் (வடமாகான பெரும்பாக நீர்ப்பாய்சன பொறியியலாளர்), திரு. சுப்பிரமணியம். தலைவர்: திரு. கே. சி. ராஜசிங்கம், உபதலைவர்கள்: திரு. இசடீன், திரு. வில்வராசா, திரு. நடராசா, கௌரவ காரியதரிசி: வில்வராசா, கௌரவ உபகாரியதரிசி: திரு எம். எஸ். ஸ்ரீகாந்தன், தனுதிகாரி திரு. சவுந்தரநாயகம், இன்னும் திரு. இஸ்மாயில், திரு. பாலராசா, திரு. சிவஞானசுந்தரம், திரு. சிருஸ்ல, ஆகியோர் கமிட்டி அங்கத்தவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.





நாளுக்கு நாள் கடின பாவனைக்கு நிகரற்று விளங்குவது.

கனபோ பொப்ளின்

ஆமாம், நாளாந்தம் கடினமாக உழைப்போர்க்கு உகந்த சிறந்த கடினமான, நன்கு பாவிக்க வல்ல புடவை இதுவே! கனபோ பொப்ளின்பாடசாலை யூனிபோம்களுக்கும் காற்சட்டை ஷர்ட்டுகளுக்கும் மிகச் சிறந்தது. வெள்ளையிலும், மென்மையான பல வண்ணங்களிலும் கிடைக்கும். சாயம் போகாது என்பதற்கு உத்தரவாதமுடையது.

ஏகவினியோகஸ்தர்கள்: ஸி. டப்ளியூ. ஈ.

கிடைக்குமிடம்: ஸி. டப்ளியூ. ஈ. இலாகா ஸ்டோர், கோட்டை, கொழும்பு. மக்கலம் ரோடு, மெயின் வீதி, புறக்கோட்டை, மருதானை மற்றும் வெளியூர்கள்.

ஞாபகமிருக்கட்டும் ஸி. டப்ளியூ. ஈ CWE தரத்திலும் ரகத்திலும் சிறந்ததைத் தருகிறது.

CWE/TX/112

'அரோகரா' கோஷம்; வேதபாராயண ஒலி,

ஆலய மணி ஓசை முழங்க

# கோணேஸ்வரருக்கு கும்பாபிஷேகம்

திருக்கோணமலை, புதன்

பக்தர்களின் அரோகரா கோஷம் வானைப் பிளந்தது. திருமுறைகள் முழங்கின. வேதியர்களின் வேத ஒலியுடன் திருமலை கோணேசராலயத்தின் கும்பாபிஷேகம் இன்று காலை சுப முகூர்த்தத்தில் நிகழ்ந்தது.

ஈழநாட்டின் பாடல் பெற்ற ஸ்தலங்களில் திருக்கோணேஸ்வரமும் ஒன்று. கடந்த மூன்றரை நூற்றாண்டுகளாக எவ்வித சரித்திரமுமின்றி இருந்தது. புராதனப் பெருமை வாய்ந்த இவ்வாலயத்தின் புனருத்தாரண பிரதிஷ்டா கும்பாபிஷேகம் இன்று காலை நடைபெற்றது.

திருமலையில் புனிதநகரான பிரடரிக்கோட்டை தெய்வீகத் தன்மையுடன் விளங்கியது. கடந்த பத்தாண்டுகளுக்குமுன் இராணுவ ஒலி கேட்ட இக் கோட்டையில் மீண்டும்தேவார திருவாசக ஒலிகள் கேட்டன.

பிரடரிக் கோட்டை விழா கோலம் பூண்டிருந்தது. துடிப்புள்ள இளைஞர்கள், பெரியவர்கள், பெண்கள், குழந்தைகள் பத்தாயிரம் பேர்வரை இக்கும்பாபிஷேக விழாவைக் கண்டுகளித்தனர்.

இலங்கையின் பல்வேறுஇடங்களிலும் இருந்து வந்த பக்தர்கள் தொகை பிரடரிக் கோட்டையை நிறைத்தது. மனித சரித்திரத்தில் குறிப்பிடத்தக்க இக் கும்பாபிஷேக விழாவைக் கண்ட பக்தர்கள் கைகூப்பி உள்ளம் நெக்கு நெக்குருக மெய்சிலிர்த்து நின்ற காட்சி கடின சித்தமுள்ளவரையும் உருக்குவதாக இருந்தது.

இன்று காலை ஆறு மணிக்குயாக பூசைகள் ஆரம்பமாகின. சரியாக ஒன்பது மணி ஐந்து நிமிஷத்திற்கு பெருஞ் சாந்திக் குட முழுக்கு விழா நடைபெற்றது.

குடமுழுக்குவிழாவைக் காண வந்திருந்த பக்தர் கூட்டம் திருஞானசம்பந்தப்பெருமான் பாடியருளிய கோணமாமலைப் பதிகத்தைப்பாடிக் கொண்டிந்தனர். பக்தர்களின் தேவார ஒலி ஒருபுறமும், வேதியரின் வேத ஒலி ஒருபுறமும், மங்கள வாத்தியங்களின் இசை ஒருபுறமும், அரோகரா கோஷம் மற்றொருபுறமும், அலைகடலின் அலை ஓசை ஒருபுறமும் ஒலித்துக்கொண்டேயிருந்தன. எங்கும் பக்திப்பரவசமே மலிந்திருந்தது.

340 ஆண்டுகளுக்குமுன்னர் போத்துக்கீயத் தளபதி கொன்ஸதாந்தீன் என்பவனால் சிதைக்கப்பட்ட கோணேசர் ஆலயம் புத்துயிர்பெற்றுக் காட்சிதருகிறது.

கும்பாபிஷேக விழாவில் பல சிறப்பன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கோணேசர் ஆலயத்திலுள்ள விமானங்களில் உள்ள கலசத்திற்கு அபிஷேகம் ஆனபோது ஒரே நேரத்தில் எல்லா விமானங்களிலும் அபிஷேகம் நடைபெற்ற காட்சி அடியார்களின் உள்ளங்களில் பக்திப் பெருவகை ஏற்படுத்துவதாயிருந்தது அதேபோல ஆலயத்தில் உள்ள மூர்த்திகளுக்கு அபிஷேகம் செய்யப்பட்டபோதும் ஒரே சமயத்தில் நிகழ்ந்தன.

குளக்கோட்ட மன்னனது ஆராதனை விதிகளைக் கூறும் கல்வெட்டில் உள்ளபடியே கோணேசராலயத்தில் இன்று ஆராதனைகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

திரியாய் என்னுமிடத்திலிருந்து தாமரைத் தண்டிலிருந்து எடுக்கப்பட்ட திரியும் இவ்வாலயத்திற்கு கொண்டுவரப்பட்டது. மூதூரில் உள்ள மல்லிகைத்தீவிலிருந்து கொண்டுவரப்பட்ட மல்லிகை மலர்கள் அர்ச்சனைக்கு உபயோகப்படுத்தப்பட்டன.

நயினாதீவு, திருமலை, நவாலி புங்குடுதீவு, இணுவில், கொழும்பு, பருத்தித்துறை முதலிய இடங்களில் இருந்து அந்தணர்கள் இக் கும்பாபிஷேக விழாக்கிரியைகளில் பங்கு கொண்டனர். நயினாதீவு ஸ்ரீ. ஐ. கைலாசநாதக் குருக்கள் பிரதம குருவாக இருந்து கிரியைகளை நடத்தினர்.

சுகாதாரப்பகுதியினர், நகராண்மைக் கழகத்தினர், சென் யோசேப் கல்லூரி, இந்துக் கல்லூரி மாணவர்களின் தொண்டு குறிப்பிடத்தக்கது. பொதுமக்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்வதில் பொலிசாரும் ஒத்துழைத்தனர்.

## ஆலயங்களுக்கு பர்மிட்மூலம் சர்க்கரை

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணத்திலுள்ள ஆலயங்களுக்கு, தேவையான சர்க்கரை பர்மிட்மூலம் வழங்கப்படவிருக்கிறது. ஆலயத் தேவைகளுக்குச் சர்க்கரை வேண்டுமாயின், ஆலய முகாமையாளர்களோ, ஆலய பரிபாலனசபையினரோ விண்ணப்பித்தால் அவர்களுக்குச் சர்க்கரை, பர்மிட்மூலம் வழங்கப்படும் என யாழ்ப்பாணம் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. கே. சிவப்பிரகாசம் தெரிவித்துள்ளார்,

ஆலயத் தேவைகளுக்குச் சர்க்கரை வேண்டுவோர் கிராமத் தலைமைக்காரரிடமும், காரியாதிகாரியிடமும் சிபார்சுக் கடிதம் பெற்றுவந்தால் அவர்களுக்கு வேண்டிய சர்க்கரைக்கு பர்மிட் வழங்கப்படும். பர்மிட்மூலம் அவர்கள் சர்க்கரையைக் கடைகளில் பெற்றுக் கொள்ள முடியும்.

## ஐயாறன்

(4-ம்பக்கத் தொடர்ச்சி)

என்ன நடக்கிறதோ பார்க்கலாம்.

* * *

ஏவியிடர்க் கடலிடைப் பட்
டினைக் கின்றேனை,
இப்பிறவி அறுத்தேறவாங்கி
யாங்கே,
கூவி அமருலகனைத்து முரு
விப் போகக்,
குறியிலறு குணத்தாண்டு
கொண்டார் போலும்,
தாவிமுதற்காவிரி நல்யமுனை
கங்கை
சரசுவதிபொற்றாமரை புட்
கரணிதெண்ணீர்க்
கோவிலொடு குமரிவரு
தீர்த்தஞ் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க் கோட்டத்
தெங் கூத்தனாரே
— திருநாவுக்கரசர்

# கப்பலை அடைவதற்கு நீந்திச்சென்ற மூவர்

## சுழியில் அகப்பட்டு இரு இளைஞர் மரணம்

யாழ்ப்பாணம், வியாழன்

சென்ற திங்கட்கிழமை காலை காங்கேசன் துறைக்கு லிப்னில் கல்லேற்றிவந்த சீனக் கப்பலைப் பார்ப்பதற்காக மூன்று வாலிபர்கள், இரண்டு மைல் நீந்திச் சென்றபோது ஒரு வாலிபர் சுழியில் சிக்கி மரணமானார்.

அல்போன்ஸ், மெக்ஸி, ஞானநந்தன் ஆகிய மூவரும் குருநகர் ஜெட்டியிலிருந்து, சாமான் ஏற்றிவந்த கப்பல் மூலம் 2 மைல் சென்றார்கள். பின்னர் சீனக் கப்பலை அடைவதற்காக கடலில் குதித்து 2 மைல் நீந்திச் சென்றார்கள். அவர்கள் எதிர் நோக்கிவந்த சுழியொன்றை அல்போன்சும், மெக்ஸியும் சாமர்த்தியமாகக் கடந்து சென்றார்கள். ஆனால் மூன்றாமவன் தன் அந்தப் பயங்கரச் சுழியை எதிர்த்துப் போராடமுடியாமல் சுழியுடன் அள்ளுப்பட்டுச் சென்று தத்தளித்து பரிதாபகரமாக மரணமானார், இச்சம்பவம் பாலதீவுக்கு அருகே நடந்துள்ளது.

மரணமான வாலிபரின் பிரேதம் மண்டைதீவுக் கடற்கரையில் நேற்றுக் காலை கண்டுபிடிக்கப்பட்டது.

# கற்பனையும், பொய்யும்

## யு. என். பி. அங்கத்தவர் கண்டனத்துக்கு பிரதமர் பதில்

கொழும்பு, புதன்

பிரதம மந்திரியின் சீன விஜயம் சம்பந்தமாக திரு. ஹெரு ல்ல எம். பி., நேற்று பாராளுமன்றத்தில் விடுத்த கேள்விக்கு பிரதம மந்திரியின் சார்பான அறிக்கை ஒன்றை திரு. வி. பி. டி' சில்வா விடுத்துள்ளார்.

பிரதமரின் செலவுக்காக ரூ 20,000 அளிக்கப்பட்டதாகக் கூறப்பட்ட புகார் அங்கத்தினரின் மனதில் எழுந்த ஒரு கற்பனை என்றும், உத்தியோக கைச்செலவைத் தவிர ரூ. 2500 தான் பிரதமருக்கு அளிக்கப்பட்டதென்றும் அவ் அறிக்கை கூறுகிறது.

அலாவுதீன் என்பவர் பிரதமருக்கு சேலைகள் வாங்கியதாகக் கூறப்படுவது பொய் என்றும், கோலாலம்பூரில் பிரதமர் வரவேற்கப்பட்டதுபோலவே, ஹாங்காங்கிலும் பிரதமர் இலங்கையர்களால் வரவேற்கப்பட்டதாயும் திரு. சில்வா அறிவித்துள்ளார்.

பிரதமருடன் 7 பேர்கள் தூதுகோஷ்டியில் சென்றதாயும், ஒவ்வொருவரும் 2 அல்லது 3 சூட்கேஸ்கள் எடுத்துச் சென்றதாயும், மொத்தம் 24 பெட்டிகள் எடுத்துச்செல்லப் பட்டதாயும் அவர் கூறினர்.

பிரதமரின் விமானம் இரவு 9 மணிக்குப் பின்பே கட்டுநாயகா வந்துசேர்ந்ததால், பிரதமருக்கு அசௌகரியம் விளைவிக்கக்கூடாது என சுங்க அதிகாரி கருதியே சுங்கப்பத்திரங்களை அலரிமாளிகைக்கு அனுப்பிவைத்தார் என்றும், அடுத்த நாளே சுங்கத் தீர்வு செலுத்தப்பட்டதென்றும், ஐக்கிய தேசிய கட்சி அங்கத்தினரின் செய்கை பிரதமரின் செய்கையை மாசுபடுத்துவதே என்றும், இது வருந்தத்தக்கது எனவும் அறிக்கை கூறுகிறது.

## இந்தியாவுக்கு தகவல் கிடைத்தது

புதுடில்லி, ஏப்ரல் 3

சீனாவிலுள்ள 3213 இந்தியக் கைதிகளை விடுதலை செய்வது பற்றி இந்திய அரசாங்கத்துக்குத் தகவல் கிடைத்திருப்பதாய் ஸ்ரீ நேரு லோகசபையில் கூறினர். இம்மாதம் 10-ம் திகதி முதல் இந்த விடுதலை ஆரம்பமாகும் என்றும், முதலில் 144 பேர் விடுவிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினர். இந்தியாவிலுள்ள சீனக் கைதிகள் தாங்கள் செல்ல விரும்பினால், அவ்வாறு செய்ய அனுமதிக்கப்படும் என்றும் அவர் கூறினர்.

## கவியரசி சரோஜினியின் பிறந்த தினம்

கோயமுத்தூர், ஏப்ரல் 3

கவியரசி சரோஜினி நாயுடுவின் பிறந்த தினத்தை அகில பாரத மாதர் தினமாகக் கொண்டாட முடிவுசெய்யப்பட்டிருப்பதாக, மந்திரி ஸ்ரீமதி லஷ்மி மேனன் கூறினர். பெப்ரவரி 13-ம் திகதி கவியரசியின் பிறந்த தினமாகும்.

## மாணவர்களுக்கு சிங்கள போதனை

கொழும்பு, புதன்

பொதுத் தராதரத்தில் 19,300 சிங்கள மாணவர்களுக்கும் 4,800 தமிழ் மாணவர்களுக்கும் விஞ்ஞானம் போதிக்கப்படுவதாக கல்வி மந்திரி திரு. பதியுதீன் முகம்மது கூறினர்.


புத்தாண்டின் புனித விருந்து!

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா

(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு)

மற்றும் சில சினிமாஸ் திரைகளில்

சந்திரபாபு, சூரியகலா, பாலையா,

ராஜம், ரி. எஸ். துரைராஜ்

மற்றும் பலர் நடிக்கும்

குமார ராஜா

4-வது வெற்றி வாரம் !

கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன் விஜயா

(கொழும்பு)(வெள்ளவத்தை)(யாழ்ப்பாணம்) (மட்டக்களப்பு

மற்றும் 5 திரைகளில்

சிவாஜி கணேசன் ஜெமினி கணேசன்

சாவித்திரி
குமாரி ருக்மணி
வி. நாகையா
முத்துலட்சுமி
எஸ். வி. ரங்கராவ்
ஜெமினி சந்திரா
எஸ் வி. சுப்பையா
ஏ. கருணாநிதி
டி. கே. ஷண்முகம்
மற்றும் பலர் நடிக்கும்



பத்மினி பிக்சர்ஸ்

கப்பலோட்டிய தமிழன்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
காமினி பொன்சேகா— ஜீவ ராணி
நடித்த
றன் மூது தாவ

2வது வாரமாக
காண்பிக்கப்படுகிறது !
முருகன் (ஜிந்துப்பிட்டி)
நவா (கும்பெனித்தெரு)
ஜஸீமா (கிராண்ட்பாஸ்)
2, 6, 9-30 மணி
ஓடியன் (நல்கிசை)
2-15, 6, 9-30 மணி
ஓடியன் (கண்டி)
2-15, 6-15, 9-15 மணி
ராஜா (யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45 மணி
ஜெமினி கணேஷன்
பி. சரோஜாதேவி
சந்திரபாபு, தேவிகா, எம். வி.
ராஜம்மா, கே. டி. சந்தானம்,
பி. டி. சம்பந்தம்
மற்றும் பலர் நடித்த



ஆடிப் பெருக்கு
டைரக்ஷன்: கே. சங்கர்


பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில்மேலை வீதி 83-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1963-ம்ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.